REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 16 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 337 ஐப்பசி 15 ஆம் நாள் திங்கட்கிழமை 02 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா சாவு 21

நேற்றும் 397 தொற்று

மொத்தப் பாதிப்பு 11,060

கொழும்பு, நவ. 2
கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் சாவடைந்துள்ளார். மஹர பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார். சுவாசப் பிரச்சினை மற்றும் இரத்த அழுத்த நோய் 15 ▶



# கொரோனா பரவுவதற்கு மக்களே காரணமாம்!

### அரசு பொறுப்பேற்க முடியாது என்று செயலணிக் கூட்டத்தில் கோத்தா காட்டம்

கொழும்பு, நவம்பர் 2
இலங்கையில் தற்போது பரவும் கொரோனா வைரஸை உருவாக்கியது அரசு அல்ல. பொதுமக்கள் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்யாததன் காரணமாகவே தற்போதைய நெருக்கடியான நிலை உருவாகியுள்ளது. கொரோனாவின் தற்போதைய அலைக்கு பொதுமக்கள்தான் காரணம். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். 15 ▶



## மேல்மாகாணத்தில் 9ஆம் திகதிவரை ஊரடங்கு நீடிப்பு!

### இராணுவத் தளபதி விசேட அறிவிப்பு

கொழும்பு, நவ. 2
கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி அதிகாலை 5 மணிவரை 14 ▶

## தனிமைப்படுத்தலில் இருந்த வயோதிபர் நேற்று இறப்பு

*கொரோனா காரணமா என அச்சம்*

மன்னார், நவ. 2
தலைமன்னாரில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த 76 வயதுடையவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளார் என்று மன்னார் 15 ▶

## 6 பேரை தேடும் பணி தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 2
நல்லூர், வேலணை மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்த தொற்றாளர்களுடன் பேருந்தில் ஒன்றாகப் பயணித்தவர்களில் 6பேர் இன் 15 ▶



## இங்கிரியவில் மூன்றாம் கொத்தணி?

6 ஆயிரம் பேர் பணிபுரியுமிடத்தில் 21 பேருக்கு தொற்று உறுதி 16 ▶



முச்சந்தி முரளி

"ஆனானப்பட்ட அமெரிக்காவே தடுமாறேக்க இலங்கை மந்திரிச்ச தண்ணியோட கொரோனாவை ஒழிக்க வழி கண்டுபிடிச்சது வேற லெவல்தான் பாருங்கோ"

### அதிகாரிகளின் அசண்டையீனத்தால்

## யாழ்ப்பாண மக்களுக்கு கிடைக்காத நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ. 2
தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு அரசு அறிவித்துள்ள 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னமும் வழங்கப்படவில்லை. அதிகாரிகளின் அசண்டையீனத்தாலேயே மக்களுக்கு அரசின் இந்த நிவாரணம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று கூறப்படுகின்றது. வீடுகளில் தனிமைப்ப 15 ▶

## பாடசாலைகள் ஆரம்பமாக மேலும் தாமதமடையலாம்!

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2
பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் செயற்பாடு தாமதமடையும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேரா 14 ▶

### கொரோனாவை கட்டுப்படுத்த

## மந்திரிக்கப்பட்ட தண்ணீரை ஆற்றில் கலந்த அமைச்சர்கள்

கொழும்பு, நவ. 2
கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக மந்திரிக்கப்பட்ட தண்ணீரை அமைச்சர்கள் 15 ▶



## கிழக்கின் நிலைமைபற்றி இந்தியா அதிக கரிசனை

*சந்திப்பு தொடர்பில் சம்பந்தன்*

கொழும்பு, நவ. 2
கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் நிலவும் நிலங்கள் அபகரிப்பு உட்பட பல பிரச்சினைகள் தொடர்பிலும் இந்தியா விசேட கவனம் செலுத்தியுள்ளது. அதற்கு உரிய நடவடிக்கைகளை அதீத ஈடுபாட்டுடன் அடுத்து 15 ▶

## மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு மட்டுப்பாடு

### ஜனாதிபதி கோத்தாபய அறிவிப்பு

கொழும்பு, நவ. 2
மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைத்தவிர்க்கும்வகையிலும் கொரோனா பரவலை கட்டுப்படுத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பல்வேறு தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.
வீடுகளில் மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு 10 நாள்களின் பின்னர் பி.சி.ஆர் பரிசோதனை, வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு 10 ஆயிரம் 16 ▶

## யாழ்ப்பாண பல்கலையில் மேலும் இரண்டு பீடங்கள்

*திட்ட முன்மொழிவு சமர்ப்பிப்பு!*

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு பீடங்களை உள்வாங்குவதற் 13 ▶

## வெளிவிவகார கொள்கையை மாற்றுகின்றது அமெரிக்கா!

*கோத்தாபயவிடம் பொம்பியோ தெரிவிப்பு* 15 ▶

# நாட்டைப் பாதுகாப்பதில் அரசுக்கு தோல்வியே!

## சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, நவ.2

நாட்டைக் கொரோனாவிலிருந்து பாது காக்கும் விடயத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துந்துள்ளது" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்று 10 ஆயிரத்தைக் கடந்துள்ளது. 20 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட முன்னர், அதாவது கடந்த ஒக்ரோபர் மாதமளவில் 3 ஆயிரம் பேரே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், தற்போது நான்கு வாரங்களில் 7 ஆயிரம் பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்போதும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இதனை சமூகத்தொற்று இல்லை என்றா கூறப்போகிறார்?

நாடாளுமன்றில் நாம் சுகாதார வழிமுறைகள் தொடர்பாக கேள்வி எழுப்பியபோது, அமைச்சர் பவித்ராவோ நாடாளுமன்றம் என்பது பொதுவான இடம் இல்லை என்று பதிலளித்தார். தற்போது நாடாளுமன்றில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவருக்கு கொரோனாத் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், இரண்டு நாள்கள் நாடாளுமன்றை மூடி தொற்று நீக்கமும் செய்தார்கள்.

20 ஐ நிறைவேற்றிக்கொள்ளும் ஆசையினாலேயே அரசாங்கம் கொரோனா விடயத்தை கடந்த காலங்களில் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த வாரமளவில் ஒரு நாளைக்கு நாடாளுமன்ற அமர்வை நடத்தத் தீர்மானித்துள்ள அரசாங்கம், 20 ஐ நிறைவேற்ற மட்டும் கடந்த காலங்களில் தொடர்ந்தும் நாடாளுமன்றைக் கூட்டியது.

கொரோனா விடயத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. தனது அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத்தவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பது இதன் ஊடாக நன்றாகத் தெரியவந்துள்ளது. நாடு ஆபத்தான கட்டத்தில் உள்ளது. இந்த நிலையில், அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது?

நாம் நாடாளுமன்றில் கருத்துக்களை வெளியிடும்போது அரசாங்க தரப்பினர் கூச்சலிட்டார்கள். எமது கருத்துக்களுக்கு செவிசாய்க்கவில்லை. எனினும், நாம் அன்று கூறிய விடயங்கள் இன்று உண்மையாகியுள்ளன. இதனை மக்களும் இன்று உணர்ந்துள்ளார்கள்" எனத் தெரிவித்துள்ளார். (ந இ)

# உயிரைப் பணயம் வைத்த இலங்கையர்

## இத்தாலி ஊடகங்கள் பாராட்டு

கொழும்பு, நவ. 2

இத்தாலியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றின்போது, தனது உயிரைப் பணயம் வைத்த இலங்கையர் ஒருவர் அந்த விபத்திலிருந்து ஒருவரைக் காப்பாற்றியுள்ளார்.

இலங்கையருடைய இந்தச் செயலை இத்தாலி நாட்டு ஊடகங்கள் பாராட்டியுள்ளன.

இத்தாலி மிலான் நகரத்துக்கு அருகில் மொன்சோ பிரதேச வீதியில் பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகி தீப்பற்றியுள்ளது.

இதன்போது தனது உயிரைத் துச்சமென நினைத்த இலங்கையர் அந்த வாகனச் சாரதியின் உயிரைக் காப்பாற்றியுள்ளார்.

தீப்பற்றி எரிந்த வாகனத்துக்கு அருகே எவரும் செல்லாத நிலையில் தனது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கையர், தீப்பற்றிய வாகனத்தின் கண்ணாடியை உடைத்து 34 வயதுடைய இத்தாலி நாட்டவரின் உயிரைக் காப்பாற்றியுள்ளார் என ஊடகங்கள் அவரைப் பாராட்டியுள்ளன. (ப-இ)



# 80,000 வாகனங்கள் கொழும்பில் தப்பியோட்டம்

கொழும்பு, நவ.2

மேல் மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர், கட்டுநாயக்க கொழும்பு, கெரவலப்பிட்டி வெளியேறும் சுற்றுப் பாதை மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக 80 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் வெளியேறியுள்ளன எனத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதற்கமைய கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் 11,450 வாகனங்களும், கெரவலப்பிட்டி வெளியேறும் சுற்றுப் பாதையில் 38, 260 வாகனங்களும், தெற்கு அதிவேக வீதியில் 31, 200 வாகனங்களும் இவ்வாறு வெளியேறியுள்ளன.

இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் மேல் மாகாணத்தில் இருந்து வேறு மாவட்டங்களை நோக்கி சென்றுள்ளன என தெரியவருகின்றது.

இவ்வாறு வெளியேறிய வாகனங்கள் மீளவும் மேல் மாகாணத்துக்குள் நுழையும்போது கடுமையான சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஹ-இ)

# செவ்வாய் தொடக்கம் ரூ.5000

கொழும்பு, நவ. 2

ஊரடங்கு காரணமாக இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்கு 5ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கும் திட்டத்தின் 2ஆம் கட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு அமைய கம்பஹா மாவட்டத்தில் 4லட்சத்து 64 ஆயிரத்து 254 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதற்காக அரசு 2,321,270,000 ரூபா பணம் ஒதுக்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# சுகாதாரப் பிரிவினர் 50 பேருக்கு கொரோனா

## மருத்துவர்களும் உள்ளடக்கம்

கொழும்பு, நவ.2



மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பிரிவினர் 50 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது என, அரசதாதியர் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 300 சுகாதார அலுவலக சபையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அச்சங்கத்தின் தலைவர், சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில வைத்தியசாலை உள்ளிட்ட பல வைத்தியசாலைகளில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ப-இ)

# கைகலப்பில் ஒருவர் காயம்

கொடிகாமம், நவ.2

மதுபோதையில் நின்றவருக்கும், குடும்பத் தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கைகலப்பாக மாறியதில் குடும்பத் தலைவர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை குடமியன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. குடமியன்,வரணிப் பகுதியை சேர்ந்த கந்தையா பாஸ்கரன் (வயது 42) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப-159)

# பழைய விலைகளுக்கே அத்தியாவசியப் பொருள்கள்

## மக்கள் விசனம்

கிளிநொச்சி, நவ.2



அரசாங்கத்தால் விலை குறைப்புச் செய்யப்பட்ட பொருள்கள் முன்னர் விற்பனை செய்யப்பட்ட விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனி, பருப்பு பெரியவெங்காயம் மற்றும் மீன் ரின் போன்றவற்றுக்கு நிர்ணய விலைகளைத் தீர்மானித்த அரசு, அதனை நடைமுறைப்படுத்துமாறு அறிவித்தது. அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு சுமார் ஒரு மாதம் கடந்த போதும் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கடைகளில் அவற்றின்விலைகள்குறைக்கப்படாது பழைய விலைக்கே அந்தப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கேட்டபோது இந்த விடயம் தொடர்பாக உரியவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ப-6)

# தாய்மாருக்கு நோயா? 1999 க்கு அழையுங்கள்

## குடும்ப சுகாதாரப் பணியகம் வேண்டுகோள்



**கொழும்பு, நவ.2**
**கர்ப்பிணிகள் மற்றும் தாய்மார்கள் நோய் நிலைமைகளின்போது 1999 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குடும்ப சுகாதார பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை கிடைக்கப் பெற்ற தாய்மார்கள் நோய் நிலைமையின் போது மருத்துவமனைக்கு சமுகமளிக்காமையால் அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தாய்மார்களுக்கு காய்ச்சல், இருமல், மூச்சு எடுப்பதில் சிரமம், கர்ப்பப்பை வாய் குழாய் ஊடான இரத்தப் போக்கு, திரவப் போக்கு, குழந்தை துள்ளுதல் தொடர்பான உணரும் ஆற்றல் குறைவு, மயக்கம், உணர்விழந்த தன்மை, தலை சுற்றுதல், உடல் குலுக்கம், உடம்பு வீக்கமடை தல், அதிக இரத்த அழுத்தம் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுமாயின், உடனடியாக அருகில் உள்ள அரச மருத்துவமனைக்குச் செல்லவும். இவ்வாறான அறிகுறிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான சிகிச்சைகளில் எந்தக் காரணத்தைக் கொண்டும் தாமதம் ஏற்படக் கூடாது. நோய்வாய்ப்படும் தாய்மார்களுக்கு தேவையான சிகிச்சையை 24 மணித்தியாலங்களும் வழங்க அனைத்து அரச மருத்துவமனைகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறிப்பு புத்தகம் அவசரகால அனுமதிப் பத்திரமாகக் கருதப்படும். எத்தகைய சந்தர்ப்பத்திலும் பிரதேச குடும்ப சுகாதார சேவை அதிகாரி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் 1999 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு 'சுவசெரிய 'அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## அரச தகவல் திணைக்களத்துக்கு கொரோனாவால் பாதிப்பில்லை

கொழும்பு, நவ.2
அரசாங்க தகவல் திணைக்களத்தின் கடமைகள் எவ்வித தடைகளும் இன்றி இடம்பெற்று வருகின்றன என அரசாங்கத் தகவல் திணைக்க ளம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
திணைக்களம் தொடர்பில் பல்வேறு தரப்பினரால் குறுகிய நோக்கத்துடன் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் சமூக மயப்படுத்தப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.
அரசாங்க தகவல் திணைக்களம் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்காக ஆகக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், திணைக்களத்தின் ஊழியர் ஒருவர் சமீபத்தில் பேலியகொடை மீன் சந்தைக்குச் சென்றதால் தொற்றுக்குள்ளானார்.
அதையடுத்து அவருடன் தொடர்புடைய அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். திணைக்களத்தில் தற்போது மிக அத்தியாவசியமானவர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர்.
அவர்களுக்கான அனைத்து சுகாதார பாதுகாப்பு செயற்பாடுகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கவனத்திற்கொண்டு கடந்த சுமார் இரண்டு வாரம் தொடக்கம் அவர்கள் திணைக்க ளத்துக்கு அழைக்கப்படவில்லை. அமைச்சரவைத் தீர்மானங்கள் கூட இணையவழியில் அறிவிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
இந்நிலையில் அரசாங்கத் தகவல் திணைக்க ளம் தனது அத்தியாவசிய மற்றும் நாளாந்த கடமைகளை எந்தவித தடையுமின்றி நடைமுறைப்படுத்துகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## களுவாஞ்சிக்குடியிலும் கால்வைத்த கொரோனா!

மட்டக்களப்பு, நவ.2
மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி களுதாவளை 4 ஆம் பிரிவைச் சேர்ந்த ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.
குறித்த நபர் கொழும்புக்கு மேசன் வேலைக்காக சென்று திரும்பியிருந்த நிலையில், களுதாவளையில் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவர் தொற்றுக்குள்ளானாரென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்நிலையில் பட்டிருப்புத் தொகுதியில் அமைந்துள்ள மண்முனை தென்மேற்கு மற்றும், போரதீவுப் பற்று பிரதேசங்களைச் சேர்ந்த தலா ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் , அவர்கள் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ரு -46)

களுபோவில மருத்துவமனையில்

## இரு மருத்துவர்களுக்கு தொற்றியது கொரோனா

களுபோவில மருத்துவமனையில் மருத்துவர்கள் இருவரும் தாதி ஒருவரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் இதனைத் தெரிவித்துள்ளது.
அதேபோன்று கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவைச் சேர்ந்த இருவரும் மோதர மற்றும் தெமட்டகொட பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த இருவரும், மாளிகாவத்தை, மருதானை மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பொலிஸ் நிலையங்களில் தலா ஒருவரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனரென கண்டறியப்பட்டுள்ளது.
அதையடுத்து அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
மேலும், கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றி வரும் பெண் பொலிஸார் ஒருவரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.
இதனால் கொழும்பு மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள பெண் பொலிஸ் அதிகாரிகள் தங்கியிருக்கும் விடுதியில் உள்ள 235 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (வ-இ)

## நீராட்டு விழாவை நிறுத்திய பொலிஸார்!

கற்பிட்டி பகுதியில் பூப்புனித நீராட்டு விழாவை பொலிஸார் தடுத்தி நிறுத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.
கற்பிட்டி பொலிஸ் பிரிவிலுள்ள காந்தா குலியா எச்சன் கடுவா மீன்பிடிக் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நீராட்டு விழாவே இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்று கற்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயம்பதி பண்டார தெரிவித்தார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாக, பல்வேறு நிகழ்வுகளை நடத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிகழ்வில் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டதாலேயே நிகழ்வு தடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

## செயலிழந்த பி.சி.ஆர்.இயந்திரம் இன்று முதல் மீண்டும் இயங்கும்!

கொழும்பு, நவ.2
முல்லேரியா வைத்தியசாலையில் செயலிழந்துள்ள பி.சி.ஆர்.இயந்திர திருந்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
இதனையடுத்து அந்த இயந்திரம் இன்று முதல் வழமை போன்று இயங்கும் என்று இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனக் குழு தெரிவித்துள்ளது. இலங்கைக்கான



சீனத் தூதரகம் தனது ருவிட்டர் பக்கத்தில் இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளது. பி.சி.ஆர்.இயந்திரத்தின் தானியங்கி மூலக்கூறு, பிரித்தெடுத்தலுக்கான கூறு ஆகியன விலகி இருந்ததில், இந்த இயந்திரம் செயலிழந்தது என்று சீனாவிலிருந்து வருகை தந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இந்த இயந்திரத்தைத் திருத்துவதற்கு சுமார் 10 மணித்தியாலங்கள் எடுத்தது எனவும் கூறப்படுகின்றது. (ற-இ)

## கொரோனாவால் விடுபட விகாரைகளில் பிரார்த்தனை

கொழும்பு, நவ.2
கொரோனாத் தொற்றிலிருந்து நாடும் உலகமும் நலன் பெறவேண்டி, அனைத்து விகாரைகளிலும் ரதன சூத்திரம் பாராயணம் செய்யுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச மஹாசங்கத்தினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கொரோனாவில் இருந்து விடுபட்டு, அனைவரும் பாதுகாப்பாக வாழ்வதற்கு புத்தரின் ஆசி வேண்டி, நாடளாவிய ரீதியில் பல்வேறு விகாரைகளில் ஏற்கனவே ரதன சூத்திரம் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## களுவாஞ்சிக்குடியில் மருத்துவ அதிகாரி மாரடைப்பால் சாவு

மட்டக்களப்பு, நவ.2
மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேச பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.கிருஷ்ணகுமார் நேற்று உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணி வரை அவரது கடமைப் பிரிவான களுவாஞ்சிக்குடி பகுதியில் அவர் கடமையில் இருந்துள்ளார். பின்னர் அவரது வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் அவர் நேற்று அதிகாலை திடீர் சுகயீனம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்துள்ளார்.
60 வயதுடைய உயிரிழந்த வைத்திய அதிகாரி திடீர் மாரடைப்பால் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-46)

## வெளியிடங்களுக்குச் சென்றோருக்கு

# காத்திருக்கிறது 6 மாதச் சிறை!

கொழும்பு, நவ.2
**பொலிஸாரின் உத்தரவை மீறி வெளி மாவட்டங்கள் சென்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



அந்தவகையில், இவர்களுக்கு கடுமையான வேலையுடன் ஆறு மாத சிறைத்தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படவுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.
பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்து எவரையும் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.
எனினும் அதைக் கருத்தில் கொள்ளாது , வெளிமாவட்டங்களுக்குச் சென்ற 454 பேர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ள னர்.
இந்நிலையில், இன்று திங்கட்கிழமை மேல்மாகாணத்தின் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது வெளிமாவட்டங்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே இவ்வாறு அடையாளம் காணப்படும் நபர்களுக்கு எதிராக ,சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இவர்களுக்கு எதிராக ஆறு மாத சிறைத்தண்டனை மற்றும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் அறவிடப்படும் என்றார். (ந-இ)

## கோவிலுக்குச் சென்றோர் தனிமைப்படுத்தப்பட்டனர்

வவுனியா, நவ. 2
வவுனியாவில் கோவிலில் வழி பாட்டில் ஈடுபட்டனரென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 15 பேரும் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.
வவுனியா, புளியங்குளம், பழைய வாடி கிராமத்தில் அவர்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் அங்கு சென்ற பொலிஸார் அவர்களை கைதுசெய்திருந்தனர்.
கொவிட் 19 தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது வெளி மாவட்டத்தவர்களுடன் இணைந்து சிவ நாகதம்பிரான் கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்டனர் என்று தெரிவித்த பொலிஸார், 15 பேர் மீதும் தனிமைப்படுத்தல் சட்ட மீறலின் கீழ் வாக்கு மூலத்தைப் பெற்றனர்.
பின்னர் கடும் எச்சரிக்கைசெய்து வழக்குப் பதிவுசெய்யாது 15 பேரையும் வழக்கிலிருந்து விடுவித்தனர். ஆனால் அவர்கள் அனைவருமே அவரவர்களின் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும் என்று பணிக்கப்பட்டனர்.
அதன்படி, கனகராயன்குளம் பகுதியில் இருவரும், வவுனியாவில் 8 பேரும், புளியங்குளத்தில் 5 பேரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (த-18)

## மூத்த எழுத்தாளர் மா.பா.சி மறைவு



கொழும்பு, நவ.2
ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், விமர்சகருமான 'மா.பா.சி' என்று அழைக்கப்படும் மா.பாலசிங்கம் (வயது81) நேற்று முன்தினம் இரவு இயற்கை யெய்தினார்.
கடந்த சில மாதங்களாக சுகயீனமடைந்த நிலையில், கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையிலேயே அவர் காலமானார். (ந-இ)

## உயர்தர மாணவனுக்கும் உறுதியானது கொரோனா

கொழும்பு, நவ.2
பேருவளை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் எஸ்.டி.வி குணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
பொதுச் சுகாதார பரிசோதகர்களால் 81 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 30 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 29 பேர் பேருவளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர். பேருவளையில் தொற்றுக்குள்ளான 29 பேர்களில் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவனும் உள்ளடங்குகின்றான். இந்த மாணவனை பரீட்சைக்குத் தோற்றும் வகையில் ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்காக ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய தொற்றாளர்களை பிங்கிரிய சிகிச்சை நிலையத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ந-இ)

## இங்கிலாந்து திரும்பின 20 கொள்கலன் கழிவுகள்

கொழும்பு, நவ.2
சட்டவிரோதமாக இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய 20 கொள்கலன்கள் நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பப்பட்டன.



நீதிமன்ற உத்தரவுக்கமைய, இலங்கை சுங்கப் பிரிவினரால், குறித்த கொள்கலன்கள் இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார். இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட 242 கொள்கலன்களில் 112 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்திலும், மிகுதி 130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும் வைக்கப்பட்டிருந்தன.
இதில் கொழும்புத் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த 20 கொள்கலன்களே நேற்று முன்தினம் அதிகாலை கப்பல் ஊடாக இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்டனஎன்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-இ)

## தாயைப் பிரித்த அதிகாரிகள்; தனயன் உயிர்மாய்ப்பு

### தனிமைப்படுத்தலால் நேர்ந்த சோகம்

கொழும்பு, நவ.2
கொரோனாப் பரிசோதனைக்காக தாயார் அழைத்துச் செல்லப்பட்டமையால் மகன் உயிர்மாய்த்த சம்பவம் ஒன்று கொழும்பில் பதிவாகியுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,
ஹோமாகம தோலவத்த பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் மஹரகமவில் உள்ள மீன் கடையில் மீன் கொள்வனவு செய்துள்ளார். அந்த மீன் விற்பனை நிலையத்துடன் தொடர்பான பலருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப் பெண்ணும் பி.சி.ஆர். சோதனைக்காக களுபோவில மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டார். தன்னைத் தனிமைப்படுத்தினால் விசேட தேவையுடைய தனது மகன் வீட்டில் தனியாக இருக்கவேண்டிய நிலை ஏற்படும் எனக் கூறி, மகனையும் தன்னோடு அழைத்துச் செல்ல தாயார் அனுமதி கோரிய போதும், அதற்கு சுகாதா ரத்துறையினர் மறுத்துவிட்டனர்.
இதனால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன அழுத்தத்துக்கு உள்ளாகிய விசேட தேவையுடைய மகன் வீட்டில் உயிர்மாய்த்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சுகாதாரத்துறை அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற நடவடிக்கையாலேயே இந்த உயிர்மாய்ப்பு நிகழ்ந்துள்ளது என அந்தப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (வ

## ரூ.29 மில்லியன் போதைப்பொருள்; கடற்படையின் அதிரடியில் சிக்கியது

கொழும்பு, நவ.2
நாடு முழுவதும் கடற்படையினரால் கடந்த வாரத்தில் முன்னெடுத்த சுற்றிவளைப்பில், 29 மில்லியன் ரூபாவுக்கு அதிகபெறுமதியுடைய போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
100 கிலோகிராம் கேரளக் கஞ்சாவும், 950 மில்லிகிராம் அளவுடைய ஐஸ்ரக போதைப்பொருளும் இந்த சுற்றிவளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படை தெரிவித்துள்ளது.
சம்பவம் தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் 34 முதல் 39 வயதுடையவர்கள் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது. (ந -இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனிதாபிமானம் தலையாயது!

இரக்கமற்ற வகையில் குடும்பப் பெண்ணொருவரைத் தனிமைப்படுத்தியதால் ஏதும் அறியாத அப்பாவி உயிரொன்று பறிக்கப்பட்டுள்ளது. ஹோமாகம தோலவத்த பகுதியில் வசிக்கும் இந்தப் பெண் மஹரகமவில் உள்ள கடையில் மீன் கொள்வனவு செய்துள்ளார். அந்தக் கடையுடன் வர்த்தகத் தொடர்பைப் பேணிய பலருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பெண்ணுக்கும் கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். தன்னைத் தனிமைப்படுத்தினால் வீட்டில் உள்ள சிறப்புத் தேவையுடைய தன் மகன் பாதிக்கப்படுவார் அவரையும் தன்னோடு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துங்கள் என்று அந்தத் தாய் மன்றாடியுள்ளார். எனினும் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. பின்னர் அந்த சிறப்புத் தேவையுடைய மகன் தவறான முடிவெடுத்து தன்னுயிரை மாய்த்துள்ளார்.

கொரோனாப் பெருந்தொற்றின் மூன்றாம் அலை பூதாகரமாகியுள்ளது. ஒவ்வொரு நாளும் சுகாதார நெருக்கடிகள் இறுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அடுத்து என்ன நடக்குமோ என்ற பதற்றமான நிலைக்குள்தான் ஒவ்வொரு நாளையும் இலங்கையர்களான நாம் எதிர்கொண்டு வருகின்றோம். இவ்வாறான நிலையில், கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான பொறிமுறை அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை. சுகாதாரத்துறையினரின் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதுதான் காலத்தின் கடமை. இதில் வாதங்கள், பிரதிவாதங்கள் செய்துகொண்டிருக்க இது நேரமல்ல. ஆனால், தனிமைப்படுத்தும்போது தாம் தனிமைப்படுத்தும் நபரின் குடும்பச் சுமைகளை, அவரின் குடும்பப் பின்னணியை சுகாதார அதிகாரிகள் சிந்திக்க வேண்டும்.


இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ள அந்தத் தாயின் கோரிக்கை மிகமிக நியாயமானதே. தன்னையே முழுவதும் சார்ந்திருக்கும் மகனையும் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப தன்னுடன் தனிமைப்படுத்துங்கள் என்ற அவரின் கோரிக்கையில் எவ்வித தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. தான் இல்லாமல் தன் குழந்தையால் (25 வயதான போதும் மனதளவில் அவன் குழந்தையே) வாழமுடியாது. அந்தக் குழந்தை முழுவதும் தன்னையே சார்ந்திருக்கின்றது என்று கதறிய அந்தத் தாயின் கோரிக்கை செவிசாய்க்கப்பட்டிருந்தால் இன்று ஓர் அவலச்சாவு இடம்பெற்றிருக்காது. தற்போது அந்தத் தாயின் மனநிலை எப்படியிருக்கும்?

கொரோனாப் பெருந்தொற்று கொடூரமானது. எனினும் அதில் மாண்டவர்களைவிடவும் மீண்டவர்களே பல மடங்கு அதிகம். பக்க நோய்களைக் கொண்டிருப்பவர்களையே கொரோனா அதிகம் கொல்கின்றது. இவ்வாறிருக்கையில் கொரோனாவிடம் இருந்து காப்பாற்றுகின்றோம் என்ற மேலோட்டப் போர்வையில் மனஅழுத்தம், மாரடைப்பு என்ற பக்க நோய்களை பெருப்பித்துக் கொண்டிருப்பதில் எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

தனிமைப்படுத்தலால் எவ்விதப் பாதிப்போ அல்லது கௌரவக் குறைவோ இல்லை. மக்கள் அதைத் தம் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும், தேசத்துக்கு ஆற்றும் பணியாகக் கருதவேண்டும் என்று ஊடகங்கள் ஒரு முனையால் விழிப்புணர்வு மேற்கொண்டிருக்கையில் மறுமுனையில் உருவாக்கப்படும் இத்தகைய பொறுப்பற்ற நெருக்குவாரங்கள் மற்றும் அடாவடித்தனங்களால் மக்களுக்கு தனிமைப்படுத்தல் தொடர்பில் பெரும் அச்சம்தான் தோற்றம் பெறும். அது தனிமைப்படுத்தலை மக்கள் வெறுக்கவும், அதிலிருந்து தப்பிப்பது பற்றிச் சிந்திக்கவுமே வழிகோலும். தனிமைப்படுத்தல் தவிர்க்க முடியாதது தான். ஆனால் அதிலும் மனிதாபிமான நகர்வுகள் அவசியம்.

# பி.சி.ஆர். முடிவு வரும்வரை எங்கும் நடமாட வேண்டாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்



**கொழும்பு, நவ.2**

**'பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைக்காகக் காத்திருப்பவர்கள் சமூகத்துக்குள் நடமாடுவது ஆபத்தானது' என்று அறிவுறுத்தியுள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.**

இது போன்ற சம்பவங்கள் நாடு முழுவதும் பதிவாகியுள்ளன. இந்த விடயத்தில் மக்கள் சமூகப் பொறுப்புடன் நடக்க வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பி.சி.ஆர். முடிவுகள் வருவதற்கு இப்போது சுமார் ஒருவாரம் ஆகின்றது. சில இடங்களில் 4 முதல் 5 நாள்கள் ஆகின்றன. நாளாந்தம் சுமார் 20 ஆயிரம் பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதிக்கப்படும்போது நாடு முழுவதும் இந்த நிலைமை காணப்படும்.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட பின்னர் முடிவுகள் கிடைக்கும் வரையில் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். கிடைக்கும் முடிவுகள் நேர்மறையாக அல்லது எதிர்மறையாகவோ இருக்கலாம். கொழும்பில் பி.சி. ஆர். பரிசோதனை செய்தால் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

கொழும்பில் பரிசோதனை செய்தவர்கள் முடிவுகள் வரும்போது மாத்தறையில் இருக்கின்றனர். இவ்வாறான சம்பவங்கள் நாடு முழுவதும் நடக்கின்றன. சோதனை நடத்தப்பட்ட இடங்களில தயவுசெய்து இருங்கள். வைரஸை வேறு இடங்களுக்குப் பரப்ப வேண்டாம் - என்றார். (எ-இ)

# ஐ.சி.யு. கட்டில்களுக்கு பற்றாக்குறை இல்லை

## வைத்திய நிபுணர் ஹேமந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ.2


கொரோனாத் தொற்றாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 143 அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்கள் தயார் படுத்தப்பட்டுள்ளன என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

நாடு முழுவதும் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்களில் மூன்று மட்டுமே தற்போது பயன்படுத்தப்படுகின்றன. கொரோனாத் தொற்று அபாய நிலைமையை அடைந்தால் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்களின் பாவனை அதிகரிக்கும். ஐ.டி.எச். வைத்தியசாலை உட்பட எந்தவொரு வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்கள் நிரம்பவில்லை. ஐ.டி.எச். மருத்துவமனையில் 10 கட்டில்கள் உள்ளன. அவற்றில் 3 மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன - என்றார். (எ-இ)

# உறுதியான நிலைப்பாட்டை ஈழத் தமிழர் எடுக்கவேண்டும்

## முன்னாள் எம்.பி. சுரேஸ் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், நவ. 2

இலங்கைத் தமிழ் மக்கள் உறுதியான சில நிலைப்பாடுகளை எடுத்து, தம்மைப் பாதுகாக்க வேண்டும். அதனூடாக இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தலுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் செயற்படவேண்டிய தேவை வந்துள்ளது. என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தேசியப் பரப்பில் இருக்கும் சகல கட்சிகளும் ஒருமித்துச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையென்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

7 கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழும் இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தச் செயற்பாடுகளையும் இலங்கைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

சீனாவின் தேவைகளுக்கு இலங்கை மண்ணை அரசு கொடுத்திருக்கின்றது. இது இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான கவலைகளை அந்த நாட்டு ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இலங்கை தானாக வலிந்து சில பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றது என்றே கருதுகின்றேன்.

இதனை தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் சகல கட்சிகளும் ஒருமித்த முடிவாக எடுத்துச் செயற்பட வேண்டும். இது காலத்தின் தேவை- என்றார். (த-20)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 2020**
"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."- *வாரன் பஃவெற்*

# மத்திய கிழக்கிலுள்ள இலங்கையருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குக!

### தூதரகங்களிடம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கோரிக்கை

**கொழும்பு, நவ.2**

**மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்களை இழந்து தங்கியுள்ள இலங்கையர்களுக்கு, புதிய தொழில்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக ஆராயுமாறு தூதரகங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.**

"மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்களை இழந்து சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தங்கியுள்ளனர்.

தற்போதைய நிலைமை காரணமாக, தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை மேலும் தாமதமடையும். இந்நிலையில் புதிய முகவர்கள் ஊடாக தொழில்வாய்ப்பை இழந்துள்ள இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற் றுக் கொடுக்குமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது" என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய கூறியுள்ளார். (ந -இ)

## 15 சுற்றுலாவிகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, நவ.2

நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற 15 பேர் ,அவர்கள் தங்கியிருந்த விடுதிகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த 11 பேரும் மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை கவனத்தில் எடுக்காமல், சுற்றுலா சென்றவர்கள் என்று நுவரெலியா சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, கல்கிஸையிலிருந்து சென்ற இருவர், தெஹிவளையிலிருந்து சென்ற 6 பேர், கடுவலவிலிருந்து சென்ற 2 பேர் மற்றும் கொழும்பிலிருந்து சென்ற 2 பேர் ஆகியோரே இவ்வாறு அவர்கள் தங்கியிருந்த விடுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

## கொரோனாவால் சாவடைந்தவரின் சடலம் எரிப்பு

கொழும்பு, நவ.2

கொரோனாத் தொற்று காரணமாக நாட்டில் 20ஆவது மரணம் பதிவாகி இருந்த நிலையில், உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியைகள் பொரளை பொது மயானத்தில் இடம்பெற்றுள்ளன. கொழும்பு கெசல்வத்தை பகுதியைச் சேர்ந்த 54 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். அவரின் இறுதிச் சடங்கு சர்வதேச தனிமைப்படுத்தல் விதிகளின்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் பொரளை பொது மயானத்தில் இடம்பெற்றுள்ளது. (ந -இ)

## மன்னார் இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, நவ.2

சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டோஹா ஊடாக இத்தாலிக்கு, போலித் தகவல் உள்ளடக்கிய விசா, கடவுச்சீட்டு மற்றும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயற்சித்தபோதே குறித்த இளைஞர் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான இளைஞர் மன்னார், வெள்ளாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் நேற்று அதிகாலை 3.15க்கு கட்டார் டோஹா செல்லும் கட்டார் விமான சேவையின் விமானத்தில் செல்வ தற்கு கட்டுநாயக்க விமான நிலை யத்துக்குச் சென்றுள்ளார். கைதான இளைஞன் மேலதிக விசாரணைக்காக குற்ற விசாரணைத் திணைக்க ளத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ந-இ)

### குருநாகலில்

## பொலிஸ் தலைமையகம் கொரோனாவால் மூடல்!

கொழும்பு, நவ.2

பொரளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், அவரது மனைவி கடமையாற்றிய குருநாகல் பொலிஸ் தலைமையகம் மூடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 10 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

## கேகாலையில் சுற்றுலாவுக்குத் தடை

கேகாலை, நவ.2

கேகாலை மாவட்டத்திலுள்ள சகல தங்குமிட விடுதிகளையும் மூடுவதற்கும், சுற்றுலாவுக்கான பயணத் தடையை விதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நடைபெற்ற கேகாலை மாவட்ட கொரோனா ஒழிப்புக் குழுவால் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இதுவரை 115 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 66 பேர் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2 ஆயிரத்து 707 பேர் இங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களுள் 8 வைத்தியர்களும் உள்ளடங்குகின்றனர். (ந -இ)



## இன்றைய நாள்

**மேடம்:** உணர்ச்சி வசப்படுவீர்கள். எதையாவது நினைத்து குழப்பம் அடைவீர்கள். உறவினர் மூலம் சில பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

**இடபம்:** குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு நற்செய்தி உண்டு. தாயிடமிருந்து உதவிகள் கிடைக்கும். பணியாளர்கள் மகிழ்வர். மிதமான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்

**மிதுனம்:** பணப்புழக்கம் அதிகமாகும். சிறிய செலவுகள் உண்டாகும். புதிய எலக்ட்ரானிக் மற்றும் மின் சாதனங்கள் வாங்குவீர்கள். திட்டமிட்டுச் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறும்.

**கடகம்:** மதிப்பும், மரியாதையும் உயரும். பொறுமையுடன் செயல்படுவீர்கள். பதவி உயர வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சகோதரரிடமிருந்து உதவி கிடைக்கும். கலைஞர்கள் வெல்வர்.

**சிம்மம்:** வீடு மாற நினைத்தவர்களுக்கு நல்ல வசதியான இடம் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி கூடும். சிந்தித்து செய்த விஷயங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி:** நேற்றைய தொல்லைகள் எல்லாம் விலகி நிம்மதி ஏற்படும். அவசியமின்றிப் பேசி வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டாம். பணியாளர்கள் தடைகளைச் சமாளிக்க போராட வேண்டியிருக்கும்..

**துலாம்:** நேர்மையான நண்பர்கள் உங்களதுமுயற்சிக்குஉதவுவர். இனிய அனுபவங்கள்ஏற்படும்.விரயங்களைச் சமாளிப்பீர்கள். அலுவலகத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** பேச்சுத் திறனால் அலுவலகத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். பக்குவமாக நடந்து உங்களது திறனை வளர்த்துக்கொள்வீர்கள். நல்லவர்களின் தொடர்பால் நலம் விளையும்.

**தனுசு:** வாங்கும் முயற்சியில் வெற்றி ஏற்படும். செல்வம் சேரும். பொது வாழ்வில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் பொறுமை தேவை. இடமாற்றத்திற்கான அறிகுறி தென்படும். வருத்தம் நீங்கும்.

**மகரம்:** தொழிலில் புதிய பங்குதாரர்கள் இணைந்து கொள்வார்கள். தாயின் உடல் நலனில் அக்கறை காட்டுவது நல்லது. மனநிறைவு ஏற்படும். நல்லவர்களின் சந்திப்பு கிடைக்கும்.

**கும்பம்:** உற்சாகம் அடைவீர்கள். விட்டுக்கொடுத்து வெற்றி பெறுவீர்கள் வேலை மாறுவது பற்றிய சிந்தனை முன்பைவிட மேலோங்கும்.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். ரகசியங்களை வெளியிடாதீர்கள். ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள். சிறு பயணங்களால் பலன் உண்டு.

# இடைநடுவில் வீட்டுத்திட்டம்: பயனாளர்கள் கடன் சிக்கலில்

மன்னார், நவ.2

2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டம் இன்னமும் நிறைவடையவில்லை. அதனால் கடன் நெருக்கடி உட்படப் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று மன்னார், நானாட்டானில் உள்ள இராசமடுக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.


இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 2018ஆம் ஆண்டு தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான 20 வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன. அமைக்கப்படும் வீடுகளின் தன்மையாலும், பொருள்களின் விலையேற்றத்தாலும் வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிதி போதாது என்று அப்போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

அப்போது கூரை வேலை முடிந்ததும் மேலதிக வேலைகளுக்கு 2 லட்சம் ரூபா கடன் பெற்றுத்தரப்படும் என்று கூறியிருந்தனர். ஒரு சிலர் கூரைவரை அமைத்துள்ளனர், சில வீடுகள் சுவர்கள் எழுப்பப்பட்டதுடன் அப்படியே உள்ளன. தேசிய வீடமைப்பு அதிகார சபையால் இப்போதுவரை மூன்றரை லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் கூறியதைக் கேட்டு கடன் பெற்று வீடுகளைக் கட்டிய நாம் இப்போது கடன் பிரச்சினையில் சிக்கியுள்ளோம்.

மிகுதிப் பணம் எப்போது கிடைக்கும் என்று தெரியவில்லை. இந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைந்து எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (எ-213)

## வாளேந்திய சிங்கத்தால் சர்ச்சையில் கோத்தா!



கொழும்பு, நவ.2

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தேசியக் கொடி ஒன்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்று வழங்கியிருந்தார். அது தொடர்பான ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

அந்தப் படங்களில் தேசியக் கொடியில் உள்ள சிங்கம், கைபிடியை விடுத்து வாளின் மேற்புறத்தை ஏந்திப் பிடித்திருப்பது போல அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையான தேசியக் கொடியில், வாளின் கைபிடியையே சிங்கம் ஏந்திக் கொண்டிருக்கும். எனவே தவறான வகையில் வடிவமைக்கப்பட்ட தேசியக்கொடியை ஜனாதிபதி ஏந்தியிருப்பதன் மூலம் நாட்டுக்கு அபகீர்த்தியை உண்டாக்கி விட்டார் என்று சர்ச்சைகள் எழுந்துள்ளன. (அ)

## நெடுங்கேணியில்
# வர்த்தக நிலையங்களை இன்று முதல் திறக்கலாம்



வவுனியா, நவ.2

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் மறுஅறிவித்தல் வரை மூடுமாறு கோரிய வர்த்தக நிலையங்களை இன்று முதல் திறக்க சுகாதாரத் துறையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து நெடுங்கேணி, ஒலுமடு, நைனாமடு ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களை கடந்த 25 ஆம் திகதி முதல் மறுஅறிவித்தல் வரை மூடுமாறு சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியிருந்தனர். எனினும், கொரோனாத் தொற்றாளர்களுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்த நெடுங்கேணியில் உள்ள ஹாட்வெயார், இரு உணவங்கள், நைனாமடுவில் உள்ள ஒரு உணவகம், ஒரு பலசரக்கு விற்பனை நிலையம் தவிர, ஏனைய வர்த்தக நிலையங்களை இன்று காலை தொற்று நீக்கம் செய்த பின்னர் திறக்குமாறு சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

பூட்டப்பட்டுள்ள 5 வர்த்தக நிலையத்திலும் கடமையில் இருந்தவர்களுக்கு இரண்டாம் கட்ட பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் அதன் முடிவைப் பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் நெடுங்கேணியில் உள்ள மதுபானசாலை மற்றும் இரு தவறணைகளைத் தொடர்ந்தும் மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப-18)

## 'பாஸ்போர்ட்' வழங்குவது இடைநிறுத்தம்!

கொழும்பு, நவ.2

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பத்தரமுல்லை பிரதான அலுவலகத்திற்கு பொதுமக்கள் வருகை தருவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் கடவுச்சீட்டுகளை வழங்கும் பணியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இன்று முதல் நடைமுறைக்கு வருமாறு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ப)

## மக்கள் ஒத்துழைப்பை கோரும் அரசாங்கம்

கொழும்பு, நவ.2

தற்போது பரவும் கொரோனா வைரஸ் உடலில் வேகமாக உட்புகும் தன்மை கொண்டதால், அதைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு அவசியம் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசு என்ற ரீதியில் நாம் மக்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். இந்தச் சவாலை முறியடிக்க மக்களும் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்காதா இலங்கை?

### சுதந்திர ஊடக இயக்கம் கவலை

யாழ்ப்பாணம், நவ.2

ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஒரு குற்றத்துக்கு கூட நீதி வழங்கப்படாத வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டில் வாழ வேண்டியுள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த அரசு கடந்த ஆட்சியின் போது பல சம்பவங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்தாலும், அவை மந்த கதியிலேயே நகர்கின்றன. யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசின் பொறுப்பாகும் என்பது உலகளாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும். இலங்கையில் சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் பிற ஊடக அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து அனைத்து அரசாங்கங்களுக்கும் அழுத்தம் கொடுக்கிறார்கள். கோரிக்கைகள் விடுக்கின்றார்கள். வரலாற்றில் கல்லெறியப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முழு அளவிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசை வலியுறுத்தும் அதேவேளை ஊடக சமூகம் மற்றும் நீதியை மதிக்கும் அனைத்துச் சமூகங்களும் விசாரணைகளைத் துரிதப் படுத்த புதிய அரசாங்கம் மீது வலுவான அழுத்தம் கொடுக்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் வேண்டுகோள் விடுக்கிறது என்றுள்ளது. (ப)

## 506 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 506 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்குச் சென்றுள்ளனர். இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 905 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 663ஆகப் பதிவாகியுள்ளது.

5 ஆயிரத்து 733 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், தொற்றுக் காரணமாக 20 பேர் உயிரிழந்துள்ளனர். (ப-இ)

# மன்னாரில் மூவருக்கு வீடுகள்

மன்னார்,நவ.2

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" என்னும் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் மூன்று வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

நானாட்டான் பிரதேசத்தில் இரண்டு வீடுகளும், முசலிப் பிரதேசத்தில் ஒரு வீடும் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஆறு லட்சம் ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன், நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார், முகாமையாளர்யூட்குலாஸ், வீடமைப்பு அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-213)

# சூரமுனங்கு விவசாயிகளின் அடிமடியில் கைவைத்த கடல்

**கிளிநொச்சி, நவ.2**

**கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சூரமுனங்குப் பகுதியில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் கடல் நீர் உட்புகுந்ததன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கால போகத்துக்காக விதைக்கப்பட்டு, முளைத்து வந்த பயிர்கள் தற்போது கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

வயலில் நெல் விதைத்து மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நேரத்தில் கடல் நீரானது வயல்களுக்கு உட்புகுந்தமையால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் உவர்நீர்த் தடுப்பணையொன்று காணப்படுகின்றது. அந்த அணைக் கட்டுகள் சீரமைப்பின்றியும், கதவுகள் அற்ற நிலையிலும் காணப்படுகின்றன. தடுப்பணை சீராக இருந்திருந்தால், இந்தக் கடல் நீர் பெருக்கு வயலுக்குள் வராதவாறு தடுத்திருக்க முடியும். கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதைய போகத்துக்கான மழை வீழ்ச்சி கிடைக்காததன் காரணமாக விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்ற நேரத்தில் கடல் நீரானது வழமைக்கு மாறாகப் பெருக்கெடுத்து கரையோர விவசாய நிலங்களை பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது -என்றனர். (ஐ-113)



## சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

கிளிநொச்சி, நவ.2

கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை கட்டுப்படுத்தும் முகமாக கிளிநொச்சி மாவட்ட 12 பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சுகாதார அமைச்சின் மோட்டார் போக்குவரத்து அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

உலக வங்கியின் நிதியில் சுகாதார அமைச்சால் இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஐ-113)

## சந்தேகநபருக்கு ஆள்பிணை

கொடிகாமம், நவ.2

உரமூடைகளைத் திருடிய சந்தேகநபரை ஆள்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. கொடிகாமம் பகுதியில் வைத்து சந்தேகநபர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது 5 லட்சம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஐ-159)

## தனிமைப்படுத்தப்பட்ட 32 பேருக்கு உதவிகள்

கிளிநொச்சி, நவ.2

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியிலுள்ள சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 32 பேருக்கு உலர் உணவு மற்றும் மருத்துவப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி 1988-1989 உயர்தர நண்பர்கள் வட்டத்தால் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-ரி)

## சிறகுகள் அமையத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.2

சிறகுகள் அமையத்தின் நான்காவது ஆண்டு நிறைவு நிகழ்வு "சிறகுகள் மெய்நிகர் சந்திப்பு" எனும் தலைப்பில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறகுகள் அமையத்தின் ஆரம்ப வரலாறு, கட்டமைப்பு முறைமைகள், மாவட்ட ரீதியிலான செயற்பாடுகள், செயற்பிட்ட அறிக்கைகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான உரைகள் இடம்பெற்றன.

மேலும் சிறகுகள் அமையத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் செயற்பாட்டறிக்கை சஞ்சிகை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சைவப்புலவர் கந்தையா பத்மானந்தன், பேராசிரியர் நவரட்ணராஜா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ரட்ணம் செந்தில்மாறன், நூலகர் செல்வராஜா, திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிறீதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் நடராஜா இராஜேஸ்வரி

எம் குலம் வாழ நம் நலம் பேண
பல்லாண்டுகளாய் எமை வழிநடத்திய தாயே
நீர் இறந்ததும் நாம் அனைவரும் உம் சேயே
எம் வாழ்வு தனை உயர்த்தி எமை தலை நிமிர்த்தி
பல்கலை புகட்டி இத்தரணி போற்ற
வாழவைத்த எம் குல விளக்கே.

எம்மைத்தாலாட்டிய கைகள் எங்கே
வரவேற்ற புன்முறுவல் எங்கே
மனச்சோகம் நீக்கிய வார்த்தைகள் எங்கே
புலம்பினோம் அம்மா நிலைகுழம்பினோம் அம்மா.

அன்புகொண்ட உள்ளம் பண்பு கொண்ட நெஞ்சம்
மாண்புகொண்ட பேச்சு இவை அனைத்தும் போச்சு
காலன் நிறுத்திவிட்டான் உம் மூச்சு
மண்விட்டு உம் தேகம் மறைந்தாலும்
விண்தொட்டு உம் ஆன்மா நிலைத்தாலும்
எம் கண்விட்டு உம் விம்பம் மறையவில்லை அம்மா

**அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையானது இன்று (02.11.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**



மலர்வு
23.06.1944

உதிர்வு
03.10.2020

**வட்டுவினி, இணுவில் மேற்கு,
இணுவில்.**

**குடும்பத்தினர்.**

# கொரோனாத் தொற்றாளர்களை இனங்காண்பது பெரும் சவால்

## முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, நவ.2

**கொரோனாத் தொற்று அறிகுறிகள் இன்றிப் பரவுவதால் தொற்றாளர்களை இனங்காண்பது பெரும் சிக்கலாக உள்ளது. தொற்றுடன் இனங்காண்பவர்களுக்கு மேற்கொள்ளப்படும் முதல் பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இனங்காணப்படாமையும் பெரும் சவாலாக இருக்கின்றது.**



இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது கொரோனாத் தொற்று எந்த அறிகுறிகளையும் வெளிக்காட்டாது பரவுகின்றது. அதனால் நாம் 14 நாள்கள் வரையில் தொற்றாளர்களை இனங்காணக் காத்திருக்க வேண்டியிருக்கின்றது.

கொரோனாத் தொற்று அறிகுறி இல்லாதவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டே அவர்களுக்குத் தொற்று இருக்கிறா? இல்லையா? என்பதை முடிவுசெய்ய வேண்டியிருக்கின்றது. அதனால், கொரோனாத் தொற்றாளர்களை இனங்காண்பது சவாலாக உள்ளது.

அதனால் எமக்குச் சந்தேகம் ஏற்பட்டால் அவர்களை சுய தனிமைப்படுத்துவதையோ அல்லது ஏனையோருடன் தொடர்புபடாத இடத்தில் தனிமைப்படுத்துவதையோ வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

இலங்கையில் கடந்த காலங்களில் இருந்த கொரோனாத் தொற்றை விடவும் தற்போது உள்ள கொரோனா வைரஸ் வீரியம்மிக்கது. இலகுவில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றக்கூடிய ஆற்றல் கொண்டது.

மக்கள் சந்தைகளில் கூடுவது, அடைக்கப்பட்ட இடங்களில் சந்தைகளை வைத்திருத்தல், பஸ்களில் கூட்டமாகப் பயணித்தல், மூடப்பட்ட இடங்களில் கூட்டங்களை நடத்துதல் போன்றவற்றை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கைகழுவுதல், முகக்கவசம் அணிதல் போன்ற சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார். (எ-246)

# யானைகள் தாக்கியதில் இவ்வாண்டு 52 பேர் சாவு

கொழும்பு, நவ.2



இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி 52 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் மாதம் ஒன்றுக்கு 700 யானைகள் பிறக்கின்றன. அவற்றில் 150க்கும் அதிகமான யானைகள் குறிப்பிட்ட ஒரு வயதுக்கு முன்னரே பல்வேறு சுகாதாரக் காரணிகளால் உயிரிழக்கின்றன.

300க்கும் மேற்பட்ட யானைகள் மனிதர்களின் துப்பாக்கிச் சூட்டிலும், பொறிகளிலும் சிக்கி உயிரிழக்கின்றன.

நாட்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி 6 லட்சத்து 100 காட்டு யானைகள் உள்ளன. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அத்துமீறும் கால்நடைகளின் உரிமையாளர்கள்மீது சட்டம் பாயும்

## *கிளி. மாவட்டச் செயலர் எச்சரிக்கை*



கிளிநொச்சி, நவ.2

கால்நடைகளைக் கட்டி வளர்க்காது வயல்களுக்குள் விட்டால், அதன் உரிமையாளர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று கிளிநொச்சி, மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில், குளங்கள் மற்றும் மழையை நம்பிய காலபோகச் செய்கைகள் சுமார் 72 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மழை இன்மையால் முளைத்தது பாதி முளைக்காதது பாதியாக வயல் நிலங்கள் உள்ளன. மழை இன்மையால் இரணைமடுக் குளத்தில் இருந்து 1 அடி நீர் கடந்த வாரம் திறந்து விடப்பட்டது. முளைத்த பயிர்களைக் கால்நடைகளில் இருந்து பாதுகாப்பதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். விதைப்புக்கள் முடிவடைந்ததும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் தற்போதும் பெருமளவு கால்நடைகள் வயல்களில் பயிர்களை நாசம் செய்கின்றன. மழையின்றி ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் இதனால் மேலும் பாதிக்கப்படுகின்றனர். கால்நடை உரிமையாளர்கள் விவசாயிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இரணைமடு விவசாய சம்மேளத்தின் செயலாளர் சிவமோகன் கேட்டுக்கொண்டார். இது தொடர்பில் கிளிநொச்சி, மாவட்டச் செயலாளரைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ-6)

# கடை உடைத்து உழுந்து திருட்டு

யாழ்ப்பாணம், நவ.2

பருத்தித்துறை நகர் பகுதியில் உள்ள பலசரக்குக் கடை உடைக்கப்பட்டு உழுந்து மூடை உள்ளிட்ட 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-26)

# பொலிஸ் அதிகாரி மாரடைப்பால் சாவு

கொழும்பு, நவ.2

சிகிரியா சுற்றுலா பொலிஸ் காவலரணின் பொறுப்பதிகாரி நேற்று உயிரிழந்துள்ளார். இவருடைய இறப்புக்குக் காரணம் மாரடைப்பு என்று தெரிவிக்கப்பட்டது.

கலேவெல்லையைச் சேர்ந்த உபாலி கருணாதிலக்க என்ற பொலிஸ் அதிகாரி சுகவீனமடைந்த நிலையில் நேற்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் தம்புள்ள மருத்துவமனையில் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# கடன்களைச் செலுத்த கடன் பெறவுள்ள அரசு

கொழும்பு, நவ.2

அரசு 71 ஆயிரத்து 700 கோடி ரூபாவைக் கடனாகப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

கடன்கள், வட்டிகள் என்பவற்றைச் செலுத்தவும், அத்தியாவசியச் செலவுகளைப் பூர்த்தி செய்யவும், இந்த ஆண்டின் எஞ்சிய காலப்பகுதி நிதிக்காகவுமே இந்தக் கடன் பெறப்படவுள்ளது.

இந்தக் கடனில் 30 ஆயிரம் கோடி ரூபாவை வெளிநாட்டுக் கடனாகவும், எஞ்சிய தொகையை உள்நாட்டுக் கடனாகவும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு கடன்கள், இலங்கை அபிவிருத்திப் பிணை முறி, அந்நியச் செலாவணி, தற்கால நிதி வசதிகள் மற்றும் முதலீட்டு திட்டங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

உள்நாட்டுக் கடன்கள் திறைசேரிப் பத்திரங்கள் மற்றும் ஏனைய வழிமுறைகள் மூலம் பெறப்படவுள்ளன. ஒக்ரோபர் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலத்துக்காக இந்தக் கடன்கள் பெறப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மீனவர்களின் கடன்களை மீளச் செலுத்த அவகாசம்!

## *ஆராயப்படுகிறது என்கிறார் இராஜாங்க அமைச்சர்*

கொழும்பு, நவ.2

மீனவர்கள் கடன்களை மீளச் செலுத்துவதற்கான நிவாரண காலத்தை அறிமுகப்படுத்தி, மூலதனக் கடன் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடற்றொழில் துறைமுகங்களில் குவிந்துள்ள மீன்களைக் கொள்வனவு செய்ய 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சின் இடையீட்டுடன் மீன்கள் கொள்வனவு செய்யப்படும். ரின் மீன் உற்பத்தியாளர்கள், கருவாடு மற்றும் மாசி உற்பத்தியாளர்கள், குளிர்பதன வசதி கொண்ட வர்த்தகர்களுடன் பேச்சு நடத்தி, கடலுணவை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. என்றார். (எ-இ)

# 'மாஸ்க்' அணியாத 61 பேருக்கு ஆப்பு!

கொழும்பு, நவ.2

**முகக்கவசம் அணியாத மற்றும் சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 61 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.**

அத்தோடுதனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 153 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இதன்போது 35 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதேநேரம் பொலிஸாரினால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவுகளைப் புறக்கணித்து மேல் மாகாணத்தை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டில் 550 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் "என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (ந இ)

## தவறான முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் சாவு

கொடிகாமம், நவ 2


தவறான முடிவு எடுத்த இளம் குடும்பஸ்தர் தன்னுயிரை மாய்த்துள்ளார். இந்தச் சம்பவம் இரவு மந்துவில் மேற்கு வேம்பிராய் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த சிவானந்தமூர்த்தி வினோதன் (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந -159)

## திருமலையில் 40 பேர் தனிமைப்படுத்தலில்

திருகோணமலை உவர்மலை பகுதியில் ஹொட்டல் ஒன்றில் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட 40 இற்கும் மேற்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்திலிருந்து திருமண விருந்துபசாரத்துக்கு சிலர் வருகை தந்துள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்து, அங்கு பொலிஸாருடன் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட 40 க்கும் மேற்பட்டவர்களை இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தியுள்ளனர். (ற-இ)



## புலிகளின் ஆயுதங்கள் மீட்பு

வவுனியா, நவ. 2

விடுதலைப் புலிகள் பயன்படுத்தியிருந்தனர் எனக் கூறப்படும் ஆயுதங்கள் சில வவுனியா பொன்னாவரசன்குளம் பகுதியில் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி, வவுனியா நீதிமன்ற அனுமதியுடன் அவற்றை மீட்டோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொன்னாவரசன்குளம் குளத்துக்கு அருகில் விஷேட அதிரடிப்படையினர் நிலத்தைத் தோண்டினர். நீண்ட நேர அகழ்வின் பின்னர் குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன. துருப்பிடித்த ரி- 56 ரக துப்பாக்கி அதற்குரிய இரண்டு மகசீன்கள் மற்றும் 5 கைக்குண்டுகள் என்பனவே மீட்கப் பட்டன. அவை செயலிழக்கவைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (கு-ரி3)

# தனிமைப்படும் குடும்பங்களுக்கு 10,000 ரூபா உணவுப்பொதிகள்

கொழும்பு, நவ. 2

தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளை இலவசமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனையின்படி இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

5 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளாக இரண்டு கட்டங்களாக அவற்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொதியும் 14 நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டிருக்கும் என்றும் இவற்றை மாவட்டச் செயலகத்தினர் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, கொழும்பில் 13 பிரதேச செயலர் பிரிவுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 6 ஆயிரத்து 25 குடும்பங்களுக்கு பழங்கள் மற்றும் உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது. (கு-இ)



## கேள்விகளே சாவிகள்!

வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டம் என்றே பலர் கருதுகிறார்கள். இதன் வெற்றி, தோல்விகள் அதிர்ஷ்டத்தின் மூலமாகவே நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் நிறைய பேர் நினைக்கிறார்கள். வாழ்க்கையின் வெற்றி, தோல்விகள் தேர்தல் முடிவுகள் போல் குழப்பமானவை அல்ல. தேர்வின் முடிவுபோல் தீர்க்கமானவை.

வாழ்க்கையில் வெற்றிபெற நினைப்பவர்களுக்கு என் நல்வாழ்த்துகள். உங்களுக்கு நன்மை உண்டாகட்டும். உங்களால் வீடும் நாடும் விரிந்த உலகமும் நன்மை பெறட்டும். வெற்றிக்கு வழி என்ன? வெற்றி உலகின் மொழி என்ன? சொல்கிறேன்.

என்னிடத்தில் உதவிகள் கேட்டுச் சில இளைஞர்கள் வருவதுண்டு. அதில் அதிகமான பேர் வேலை வாங்கித் தரும்படி தான் கேட்பார்கள். "என்ன வேலை?" என்றால், "ஏதாவது வேலை" என்பார்கள். வருத்தப்படாதீர்கள். இவர்கள் வெற்றி பெறுவது கடினம். என்ன வேலை என்கிற தெளிவு இல்லாமல் ஏதாவது ஒரு வேலை என்றால் நான் அவருக்கு எந்த வேலைக்கு முயற்சி செய்வது? என்னுடைய வேலையைத்தான் அவருக்குத் தரமுடியும்!

இது மிக முக்கியமான விஷயம். எதை அடைய வேண்டும் என்கிற தெளிவு உங்களுக்கு இருந்தால்தான் அதை நீங்கள் அடைய முடியும். அடைய வேண்டியது எது என்கிற முடிவே இல்லை என்றால் எதை அடைய முடியும்? நமக்கு எது வேண்டும் என்கிற தெளிவு இருந்தால்தான் அது கிடைக்கும். கிடைத்தாலும் ருசிக்கும். இல்லையென்றால் கிடைக்காது. கிடைத்தாலும் ருசிக்காது. காரணம், கிடைத்ததே தெரியாது. ஹொட்டலில்கூட பல பேர் என்ன சாப்பிடுவது என்ற தெளிவேயின்றி மெனுகார்டை, பட்சணப் பட்டியலை வெறித்து வெறித்துப் பார்ப்பார்கள். எதையும் முடிவு செய்யமாட்டார்கள். இந்தக் குழப்பவாதிகள் முறையாக வெற்றிக் கனியைப் பறிப்பது கடினம். எனவே, வாழ்க்கையில் உங்களுக்கு என்ன வேண்டும் என்கிற தெளிவு கண்டிப்பாக இருக்க வேண்டும். இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? இனி அடைய வேண்டிய நிலை என்ன? அதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் எவை? எவை என்கிற விழிப்பு நம்முள் தோன்றிவிட்டால் நமக்கு வெற்றி நிச்சயம். எங்கே இருக்கிறோம்? எங்கே போகவேண்டும்? எப்படிப் போகப் போகிறோம் என்கிற தெளிவு பிறந்துவிட்டால் வெற்றி நிச்சயம்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் புகழுடன் விளங்கியவர் ஜான் எஃப். கென்னடி. அவர் வெள்ளை மாளிகையில் தம்மைக் காண வந்திருக்கும் பார்வையாளர்களுடன் நாள்தோறும் சில நிமிடங்கள் செலவிடுவார். தம்மைப் பார்க்க வந்திருந்த இளைஞர்கள், பள்ளி மாணவர்களுடன் சிறிது நேரம் பேசுவார். பார்வையாளர்களில் பளிச்சென்ற புன்னகையுடன் இருந்த மாணவன் கன்னத்தைத் தட்டி, "உன் எதிர்கால லட்சியம் என்ன?" என்றார் கென்னடி பளீரென்று பதில் சொன்னான் அந்த மாணவன். "இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும். இதுதான் என் லட்சியம்" என்றான். விழிகளை உயர்த்திவிட்டு, "குட்" என்று வாழ்த்திவிட்டு கென்னடி நகர்ந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஆவதுதான் லட்சியம் என்ற அந்தச் சிறுவன் பிற்காலத்தில் அப்படியே ஆனான். அவன் வேறு யாருமல்ல... புகழ் பெற்ற பில் கிளிண்டன். அவர் எண்ணம் வெறும் ஆசையோ, கற்பனையோ அல்ல. தீர்க்கமான தீர்மானம். அதனால் அது நடந்துவிட்டது. எல்லோருக்கும் இப்படி நடக்குமா? இப்படி நடக்கிறதா என்று என்னை ஏளனமாகப் பார்க்கும் மூடர்களுக்கு ஒன்று சொல்கிறேன். நம்பிக்கைகள் நடக்காமல் போகும் பட்டியலில் நம் பெயர் ஏன் இருக்கவேண்டும்? பலித்தவர் பட்டியலில் நம் பெயர் இருக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாதா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.)


இந்த இளைஞனைப் பற்றிச் சொன்னேன். நான் சந்தித்த வேறு ஒரு இளைஞனைப் பற்றிச் சொல்லவா? செழிப்பாக விளைந்திருந்தான் அந்த இளைஞன். ஒரு கூட்டத்தில் என்னிடத்தில் சம்பந்தமில்லாமல் அபத்தமாகக் கேள்விகள் கேட்டான். பொறுமையாக, "தம்பி... என்ன பண்றீங்க?' என்று நான் கேட்டேன். "அப்பாவுக்கு உதவி ஒத்தாசையாக இருக்கிறேன்" என்றான். இந்த நூற்றாண்டில் இப்படி ஓர் இளைஞனா என்ற இன்ப அதிர்ச்சியுடன், "அப்பா என்ன பண்றார்?" என்றேன். "சும்மா வீட்ல இருக்கார்" என்று வெடிகுண்டு வீசினான் அந்த இளைஞன். தான் காலத்தை வீணாக்குகிறோம் என்ற குற்ற உணர்வே இல்லாத இவன் எப்படி முன்னேற முடியும்?

இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? நம் குடும்பத்தின் நிலை என்ன? நாம் வளர, முன்னேற என்ன செய்யலாம் என்கிற சின்னச் சின்னக் கேள்விகள் உங்களுக்குள் பிறந்துவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக விடைகள் கிடைக்கத் தொடங்கும். ஒன்றை மறந்துவிடாதீர்கள். எவ்வளவு பெரிய கதவுக்கும் தாழ்ப்பாள் சின்னதுதான். பூட்டோ அதை விடச் சின்னது. சாவியோ... பூட்டை விடச் சின்னது. சின்னச் சாவியால் பூட்டைத் திறக்கலாம். பூட்டைத் திறந்தால் தாழ்ப்பாளைத் திறக்கலாம். தாழ்ப்பாளைத் திறந்தால் பெரிய பெரிய கதவுகளையே சுலபமாகத் திறக்கலாம். எனவே சின்னச் சின்னக் கேள்விகள், பெரிய பெரிய கோட்டை வாயில்களைத் திறக்கப் போகும் சாவிகள். இதை நீங்கள் உணர்ந்தால் வெற்றி நிச்சயம்.

# சனநெருக்கத்தைக் குறைக்க முல்லைத்தீவில் நடவடிக்கை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, நவ.2
முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் இருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் நெருக்கமாகக் கூடும் இடங்களில் நெருக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கடந்த காலங்களில் முல்லைத்தீவில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படவில்லை. தற்போது தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.
தேவையற்று நடமாடுவதையும், மதத லங்களில் செறிவாகக் கூடுவதையும் தவிர்க்க வேண்டும். அந்தியாவசிய நிகழ்வுகளில் உரியவர்கள் மட்டும் கலந்து கொண்டு ஆள்களை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.
சந்தை போன்ற மக்கள் கூடும் இடங்களில் மக்கள் செறிவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூடிய இடங்களில் இல்லாது, திறந்த இடங்களில் சந்தைகளைச் செயற்படுத்த வேண்டும். இது மக்கள் கூட்டமாகக் கூடுவதைத் தடுக்கும். சுகாதார அறிவுறுத்தல்களை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்றார். (எ-246)



## பிறந்தநாள் விருந்தில் கொரோனா நோயாளி

### 165 பேர் தனிமையில்

கொழும்பு, நவ.2
பிறந்தநாள் விருந்துக்குச் சென்ற கொரோனா நோயாளியால் 36 குடும்பங்களைச் சேரந்த 165 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
நிக்கவரெட்டிய தியகம பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பொலிஸ் அதிகாரி ஒருவர் பிறந்த நாள் விருந்து ஒன்றுக்குச் சென்றுள்ளார்.
இந்நிலையில் விருந்தில் கலந்து கொண்ட 165 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என நிக்கவரெட்டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.
அத்துடன் அந்தப் பகுதிக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது டன், வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளார்.
இவ்வாறான கொரோனாத் தொற்று ஆபத்தான நிலைமைகளில் மக்கள் கூடும் நிகழ்வுகளை நடத்துவதை தவிர்க்குமாறு பொது மக்களுக்கு சுகாதாரப் பிரிவால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

# குறிகாட்டுவானுக்கு பஸ்ஸில் சென்றோருக்கு அறிவுறுத்தல்

## உடன் தொடர்புகொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள்

கொழும்பு, நவ.2
**கொரோனாத் தொற்றுடன் கண்டுபிடிக்கப்பட்ட இருவர், கடந்த 26ஆம் திகதி அதிகாலை 6.50 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் பயணித்துள்ளனர். அந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
26ஆம் திகதி அதிகாலை 6.50 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்ட NA 9167 DILA என்ற இலக்கமுடைய தனியார் பஸ்ஸில் தொற்று இனங்காணப்பட்டவர்கள் பயணித்துள்ளனர். அந்த பஸ்ஸில் பயணித்த ஏனையவர்கள் உடனடியாக வட மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்புக்குரிய 021 222 6666 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு தங்களின் விவரங்களைத் தர வேண்டும்.
அதன்மூலம் கொரோனாத் தொற்றுப் பரிசோதனை மேற்கொண்டு, உங்கள் குடும்பங்களையும், அயலவர்களையும் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்க முடியும்.
இந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூகப் பொறுப்புடன் எந்தவித அச்சமும் இன்றி உரிய தகவல்களை வழங்கி ஒத்துழைக்க வேண்டும். - என்றுள்ளது.
கடந்த 25ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்பட்டு வந்த புங்குடுதீவு மற்றும் வேலணையைச் சேர்ந்த மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் இருவரே பஸ்ஸில் பயணித்துள்ளனர். (எ-இ)

## நாட்டைவிட்டுத் தப்பிக்க குற்றவாளிகள் முயற்சி

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.2
பாதாள உலகக்குழுத் தலைவர் மாகந்துரே மதுஷ் கொல்லப்பட்ட பின்னர், நாட்டில் தலைமறைவாக இருந்து வரும் பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள் உள்ளிட்ட குற்றவாளிகள் இரகசியமாக நாட்டிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்து வருகின்றனர் என்று புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது என மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
கொழும்பைச் சேர்ந்த பிரபல பாதாள உலகக்குழு தலைவர் எனக் கூறப்படும் புளுமெண்டால் சங்காவின் மனைவி அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணைகளில் பாதாள உலகக்குழுத் தலைவர் படகு ஒன்றைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு தப்பிச்செல்ல திட்டமிட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன.
கொழும்பில் உள்ள பாதாள உலகக் குழுவினர் மாத்திரமல்லாது தெற்கில் உள்ள பல குற்றவாளிகள் பாதாள உலகக் குழுவினருக்கு எதிரான நடவடிக்கைக்கு அஞ்சி கடல் வழியாக நாட்டிலிருந்து தப்பிச்செல்ல முயற்சித்து வருகின்றனர். இந்தக் குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்காக பொலிஸ் குழு ஒன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்றார். (ஐ-இ)



## கஞ்சாவுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, நவ.2
கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் வைத்து ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மாங்குளம் பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து 800 கிராம் கேரளாக் கஞ்சா மற்றும் ஒரு தொகை பணம் என்பனவற்றை மீட்டுள்ளனர்.
கைதான சந்தேகநபர் கிளிநொச்சியை சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்டபதில் நீதவான் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்தியபோது எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-19)

## உடுவிலில் தொற்று நீக்கம்

யாழ்ப்பாணம், நவ.2
யாழ்ப்பாணம், உடுவில் பகுதியில் நேற்று கொரோனாத் தொற்று நீக்கி மருந்து விசிறப்பட்டது.
அங்கு தொற்றாளர்கள் இருவர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் உடுவில் பிரதேச சபையினர்,உடுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ,சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் உடுவில் கிராமத்தில் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
அப்பகுதி மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள், மற்றும் தனிமைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகளும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. குறித்த பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ப)

## மீன் வியாபாரிகள் 4 பேருக்கு கொரோனா

கொழும்பு, நவ.2
பாணந்துறை அருக்கொட பிரதேசத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று மீன் விற்பனையில் ஈடுபட்ட நால்வருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
குறித்த 4 மீனவர்களிடமும் மீனகளைக் கொள்வனவு செய்தவர்கள், விரைவாக பிரதேச சுகாதாரப் பிரிவினரைச் சந்திக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளான மீனவர்கள் நால்வரும் பேலியகொட மீன்சந்தையில் மீன்களைக் கொள்வனவு செய்துள்ளமை தெரியவந்துள்ளது. (ப)

# அபிவிருத்தி திட்டங்களால் பொருளாதாரம் மேம்படும்

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் நம்பிக்கை

கொழும்பு, நவ.2
தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தி, தனியார் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்குவதன் மூலம் பொருளாதாரத்தை விரிவாக்க முடியும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இத்தகைய முயற்சிகள் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த ஆறரைச் சதவீத பொருளாதார வளர்ச்சியை நோக்கி நாட்டை இட்டுச் செல்ல வழிவகுக்கும்.

இந்த வருடத்தின் முதல் பாதியில் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. ஆனால், அது வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பியுள்ளது. தெளிவான தொலைநோக்குடன்கூடிய புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைக் கட்டமைப்பு பொருளாதாரத்தின் செயற்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு அப்பால் விவசாயக் கைத்தொழில் பெற்றோலியத் துறைகள் சார்ந்த ஏற்றுமதி வாய்ப்புக்களை மேம்படுத்தவும் அதன் மூலம் துறைமுக நகர், ஹம்பாந்தோட்டை துறைமுக தொழில் வலயம் முதலான திட்டங்கள் ஊடாகப் போதிய வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்கான இறக்குமதி செலவினத்தில் 300 கோடி டொலரைச் சேமிக்க முடிந்துள்ளது. இதன்மூலம் ஏற்றுமதிக்கும், தொழில் படைக்கும் அனுகூலங்கள் கிடைத்துள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-இ)

சவேந்திர சில்வாவின்

# பயணத்தடைக்கு காரணம் இராணுவ அதிகாரிகளே!

சிங்கள இணையத்தளம் புதுத் தகவல்

கொழும்பு, நவ.2
**முன்னாள் இராணுவ அதிகாரிகள் மூவர் வழங்கிய சாட்சியங்களே இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்க அரசாங்கம் பயணத் தடையை விதிக்கக் காரணம் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணத்தின் பின்னர் தெரியவந்துள்ளது என்று சிங்கள இணைத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.**

குறித்த முன்னாள் இராணுவ அதிகாரிகள் மூன்று பேர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் சத்தியக் கடிதங்களை வழங்கியுள்ளனர்.

இந்த மூன்று பேரில் ஒருவர் முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் என்பதுடன் ஏனைய இருவர் சாதாரண அதிகாரிகள் என தெரியவந்துள்ளது என்று அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அத்தோடு சம்பந்தப்பட்ட மேஜர் ஜெனரல், இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்டவர் எனவும், தான்முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்சவின் இரகசியக் கட்டளைகளை வெளியிடும்அதிகாரியாக கடமையாற்றினேன் எனத் அவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கூறியுள்ளார் என்றும், அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது. (ஐ-இ)

# ஆக்கத்திறன் போட்டி இறுதித்திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.2
புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடரின் இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் இலக்கிய கலைத்திறன்களை ஊக்குவிக்கும் வகையில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் சிறுகதை, பாடலாக்கம், குறுநாடகம், கவிதையாக்கம், சிறுவராக்கம் மற்றும் சித்திரம் போன்ற ஆக்கத்திறன் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் போட்டிகளின் இறுதித் திகதி 2020.10.31 ஆம் திகதியென தெரிவிக்கப்பட்டிருந்த போதும் இவ் ஆக்கங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியாக நவம்பர் 23 ஆம் திகதி என நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-60)

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த புதிய போக்குவரத்து நடைமுறை

வவுனியா, நவ.2
வவுனியா-கண்டி வீதியில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் முகமாக வவுனியா போக்குவரத்து பொலிஸாரால் புதிய போக்குவரத்து நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் வரையிலான பகுதியில் தினசரி மூன்றுக்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெறுகின்றன.


இதனையடுத்து அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக வவுனியா போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்கவின் ஆலோசனைக்கமைய புதிய வீதி நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் வரையிலான வீதியில் வாகனம் முந்திச்செல்லத் தடை விதிக்கப்பட்டு சுமார் ஒரு கிலோ மீற்றர் தூர வீதிக்கு தொடர் வெள்ளைக்கோடு போடப்பட்டுள்ளது.

அத்துடன் "அதிக விபத்துக்கள் இடம்பெறும் இடம் அவதானமாக வாகனத்தினை செலுத்தவும்" என்ற வசனத்தைத் தாங்கிய விளம்பரப் பலகையும் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

# சுற்றுலா வழிகாட்டிகளுக்கு கொடுப்பனவு வழங்க முடிவு

கொழும்பு, நவ.2
கொரோனா காரணமாக பாதிப்பைச் சந்தித்துள்ள மாகாண சபையின் கீழ் பயிற்சி பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் பஸ் சாரதிகளுக்கு கொடுப்பனவு வழங்க சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது. அதன்படி, 2020 ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை பதிவு செய்துள்ள 4,800 சாரதிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார். (வ-இ)



# வேட்டைக்கு சென்ற எண்மர் கைது

திருகோணமலை, நவ.2
திருகோணமலை, கோமரங்கடவல காட்டுப் பகுதியில் உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கிகளுடன் 8 பேர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் புல்மோட்டையைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் வேட்டையாடச் சென்றபோதே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

புல்மோட்டை, மயிலவெவ காட்டுப்பகுதிக்கு வேட்டையாடுவதற்காக குழு ஒன்று சென்றுள்ளது. என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-45)

# கும்பாபிஷேகம் பிற்போடல்

யாழ்ப்பாணம்,நவ.2
வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம், கொரோனாத் தொற்றின் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

கும்பாபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை இடம்பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# சுகாதாரப் பரிசோதகர்களுக்கு முல்லையில் மோ.சைக்கிள்கள்

முல்லைத்தீவு, நவ.2
தற்போது நிலவும் கொரோனா அவசர நிலையைக் கருத்திற்கொண்டு, வினைத்திறனான சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, முல்லைத்தீவு மாவட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட 16 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

உலக வங்கியின் நிதி உதவியில், மத்திய சுகாதார அமைச்சால் குறித்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.காண்டீபன், மத்திய சுகாதார அமைச்சிலிருந்து வருகைதந்த அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கினர். (ப-246)





# கொரோனாவைத் தடுக்க அரசிடம் திட்டமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 2

**கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

பெருந்தொற்று பரவுகை ஏற்பட்டுள்ள நிலையில் அரசின் செயற்பாடுகளில் திருப்திகொள்ள முடியாது. தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதிக்கு மக்கள்மீது இருந்த கரிசனை, இப்போது குறைந்துவிட்டது. அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் தங்களுக்கு வாக்களித்த மக்களை உதாசீனம் செய்துள்ளனர்.

கொவிட்19 பரவுகையைக் கட்டுப்படுத்தி விட்டோம் என்று மார்தட்டிய அரசு இப்போது செய்வதறியாது திணறுகின்றது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எந்தவிதத் திட்டங்களும் அரசிடம் கிடையாது. என்றார். (எ.இ)

## மறவன்புலவு, கைதடியில் 2 குடும்பங்கள் தனிமை!

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவருடன் தொடர்பைப் பேணியவர்கள், சுகாதாரப் பிரிவினரால் சுயதனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதன் அடிப்படையில் மறவன்புலவு மற்றும் கைதடி ஆகிய பகுதிகளில் இரு குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். சாவகச்சேரி பிரதேச சுகாதார அலுவலர்கள் குறித்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டதற்கான அறிவுறுத்தல் 'ஸ்ரிக்கர்'களை ஒட்டியுள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்திருந்தவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அதனையடுத்தே அவருடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் அவரவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (த-20)

## திருமலையில் நேற்று 12 பேருக்கு கொரோனா

திருமலை, நவ. 2

திருகோணமலையில் 12 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந் தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

திருகோணமலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 207 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 834 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துள்ளனர்.

மாவட்டத்தில் இன்று (நேற்று) வரைக்கும் 495 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி இன்று (நேற்று) மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆறு பேரும், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் மூன்று பேரும், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் ஒருவரும், குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் ஒருவரும், தம்பலகாமத்தில் ஒருவரும் கொரோனாத் தொற்றாளர்களாக இணங்காணப்பட்டுள்ளனர் என்றார். (ஐ45)

## பொதுஜன பெரமுனவின் கொண்டாட்டங்கள் ரத்து!

கொழும்பு, நவ. 2

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் 4ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்தத் தகவலை அக்கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். (ஓ-22)

## கொரோனாத் தொற்றுடன் கடலுக்கு சென்ற மீனவர்

கொழும்பு, நவ. 2

பி.சி.ஆர். பரிசோதனை செய்த மீனவரொருவர், பரிசோதனை அறிக்கை கிடைக்கும் முன்னர், மீன்பிடித் தொழிலுக்காக கடலுக்குச் சென்றுள்ளார். அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து மீண்டும் கடலிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் நடந்துள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பேருவளை மீன்பிடி துறைமுகத்திலிருந்து ஐவருடன் குறிப்பிட்ட மீனவர் கடலுக்குச் சென்றுள்ளார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து 50 மீற்றர் கடல் மைல் தொலைவிலிருந்து அவர் மீண்டும் கரைக்கு அழைத்து வரப்பட்டார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (க,இ)

## படப்பிடிப்புக் குழுவினர் 14 நாள்கள் தனிமையில்

கொழும்பு, நவ. 2

தொலைக்காட்சி நாடகக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் பண்டாரவளையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தொலைக்காட்சி நாடகம் ஒன்றைப் படமாக்கச் சென்றபோதே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தெற்கில் பிரபலமான நடிகர், நடிகைகளும் இந்தக் குழுவில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பண்டாரவளைப் பகுதிக்கு இவர்கள் சென்றபோது, பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதையடுத்து அவர்களை அங்கிருந்து அகற்றி, சுகாதார அதிகாரிகள் தனிமைப்படுத்தியுள்ளனர்.


அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## செயற்பாடுகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ் மாவட்ட சாரணர் சங்க தலைமைக் காரியாலயத்தின் செயற்பாடுகள் யாவும் கொரோனா பெருந்தொற்று அசாதாரண நிலைமை காரணமாக இன்று தொடக்கம் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன, என்பதுடன் இனிவரும் செயற்பாடுகள் நிகழ்நிலை மூலம் இடம்பெறும் எனவும் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார். (மரி4)

## பொலிஸ் அதிகாரிகள் கொரோனா பிடியில்



கொழும்பு, நவ. 2

இலங்கையில் இதுவரை பல்வேறு பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 105 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பேலியகொட கொத்தணி மூலமே இவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற, ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடமையில் இருக்கும் பொலிஸாருக்கு சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இதனால் கடந்த மார்ச் மாதம் முதல் பொலிஸார் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை. எனினும், பேலியகொட மீன் சந்தை உள்ளிட்ட இடங்களுக்கு சென்றவர்கள் மூலமே வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனால் 300க்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், ஆயிரத்து 800 இற்கும் அதிகமானோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றார். (ற-44)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## யாழ்ப்பாண..

கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான முன்மொழிவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

மருதனாமடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை நுண்கலைப் பீடமாகவும், கைதடியில் அமைந்துள்ள சித்த வைத்தியத்துறையை சித்த வைத்திய பீடமாகவும் தரமுயர்த்துவதற்கான முன்மொழிவுகளே நேற்றைய பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை நுண்கலைப் பீடமாகத் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையிலும், சித்தவைத்தியத்துறையை சித்த வைத்திய பீடமாகத் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென முன்னாள் துணைவேந்தர் சு.மோகனதாஸ் தலைமையிலும் பேரவையால் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

அந்தக் குழுக்கள், பல்வேறு கள ஆய்வுகள், சந்திப்புகளின் முடிவில் தங்கள் பரிந்துரைகள் மற்றும் திட்ட முன் மொழிவுகளை நேற்று இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தன. அவற்றை இம்மாதம் இடம்பெறவுள்ள விசேட மூதவை (செனற்) கூட்டமொன்றில் முன்வைத்த பின், மூதவையின் பரிந்துரையுடன் விசேட பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, பேரவை அங்கீகாரத்துடன் பீடங்களைத்தரமுயர்த்துவதற்கான வேண்டுகையைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஓ,5)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் யோகநாதன் (யோகர்)

(முன்னாள் வரி இறுப்பாளர், மருதனார்மடம் சந்தை)

உடுவில் கிழக்கை பிறப்பிடமாக கொண்ட அம்பலவாணர் யோகநாதன் (யோகர்) (முன்னாள் வரி இறுப்பாளர், மருதனார் மடம் சந்தை) கடந்த (29.10.2020) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவர் அம்பலவாணர்-இராசம்மா தம்பதியரின் புத்திரரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா) காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஜெகநாதன், இராமநாதன் மற்றும் இரத்தினேஸ்வரி (ஓய்வுபெற்ற நூலகர், பொது நூலகம் சுன்னாகம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (30.10.2020) அவரது இல்லத்தில் நடைபெற்றது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நூலக வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 03 . 1932



மறைவு
01 . 11 . 2020

### இராமு நடராசா

விநாயகர் ஸ்ரோர்ஸ் (சாவகச்சேரி) உரிமையாளர்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், கண்டி வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகர் ஸ்ரோர்ஸ் (சாவகச்சேரி) உரிமையாளர் இராமு நடராசா நேற்று (01.11.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு-சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (02.11.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் ஸ்ரோர்ஸ்,
185/1, கண்டி வீதி,
சாவகச்சேரி.

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி அம்மாக்குட்டி இராசரத்தினம்



பிறப்பு 01.07.1932 இறப்பு 30.10.2020

கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. அம்மாக்குட்டி இராசரத்தினம் 30.10.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இளையபிள்ளை தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரியும், பரமு மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (ஓய்வு நிலை அதிபர்), ரவிச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற ரஞ்சினி மற்றும் ராகினி (கொழும்பு), ரவிதாசன் (லண்டன்), ராஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வனஜா (ஓய்வுநிலை ஆசிரியர்), ஜெயசோதி (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார், மற்றும் மீரா (லண்டன்), சதானந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சுந்தரம்பிள்ளை மற்றும் செல்லமுத்து (ஓய்வு நிலை ஆசிரியர்), சிவக்கொழுந்து (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சுப்பிரமணியம் மற்றும் ஜெகசோதி (லண்டன்), புவனேஸ்வரி (கனடா), ஶ்ரீனிவாசன் (லண்டன்), ஆகியோரின் மைத்துனியும் பிரசன்னா, சோபிகன், அனுஜன், இந்துசன், அஜந்தா, அஜித், அனித்தா, சிவலஜா, ஜஸ்மிரன், மித்திரா, யாதவன், கஜானன், அரன், மிதுன், மனோஜ், பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் எதிர்வரும் (03.11.2020) செவ்வாய் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துயரில் வாடும் : குடும்பத்தினர்.

இ. ரவீந்திரன் (மகன்) - +94778994628 சாவகச்சேரி
இ. ரவிச்சந்திரன் (மகன்)- 16475229819 கனடா
இ. ரவிதாசன் (மகன்) - 447305741002 லண்டன்

*மேல் மாகாணத்தில்....*

நீடிக்கப்பட் டுள்ளது என்று இராணுவத் தளபதி, லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொவிட் -19 தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் செயலணியின் தலைவரான இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்று மாலை 4 மணிக்கு வெளியிட்ட விசேட காணொலி நேரலை அறிவிப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை எஹெலியகொட, குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவுகள் மற்றும் குருநாகல் நகர சபை பகுதிக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்படும் என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா வைரஸ் தொற்று பரவல் கொத்தணியை அடுத்து கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் கொவிட் 19 தொற்றுநோயின் பரவல் தீவிரமடைந்துள்ளதால் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் கடந்த 29ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்த ஊரடங்கு நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனை மேலும் ஒரு வாரத்துக்கு நீடித்து புதிய அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-த)

**பணிப்பெண் தேவை**

மாதகலில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டிலேயே தங்கி வீட்டுப்பணி செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வயது : 20 - 60

076 342 8297, 077 794 7247

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் 1 1/2, 2, 3 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகளும், கோப்பாய் பூதர்மடச் சந்திக்கு அண்மையில் 1 3/4 பரப்பும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6011 135

**தேவை (WANTED)**

நன்கு அனுபவமுள்ள Food City களில் Display வேலை செய்த 5 வருட கால அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 076 6416 466

zoom
**A/L 2021**
**மீட்டல் வகுப்பு**
**Revision & Paper**

**AL/2020இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான Day Class**
**கணிதம் & உயிரியல் பிரிவு**

ஆரம்பம்: 04-11-2020
காலம் : திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 7:00 மணிமுதல் 12.30 வரை

சாதாரண வகுப்புக்கள் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டாலும் ZOOM ஊடான ONLIE வகுப்புக்கள் இறுதிவரை தொடரும்
கொழும்பின் முன்னணி ஆசிரியர்களின் குழாமினால் ஆரம்பிக்கப்படுகின்றது.

இணைந்த கணிதம் : S.Premnath B.Sc., PGDE
7:00 am - 8.30 am
English & Tamil Medium
உயிரியல் : V.Umashanger B.Sc., PGDE
7:00 am - 8.30 am
பௌதிகவியல் : S.R.Jeyakumar B.Sc., PGDE
9:00 am - 10.30 am
இரசாயனவியல் : V.Parameswaran B.Sc., PGDE
11:00 am - 12.30 pm

ஆரம்ப அலகிலிருந்து இறுதிவரை வினாக்கள் செய்யப்படும்.
(Past Papers & Model Questions)

தொடர்பு: Noble Academy
15, 36th Lane, Wellawatte, Colombo-06
011-2363831 / 011-2505816 / 076 75 80 659
இலங்கையின் எந்தப் பகுதியிலுள்ள மாணவர்களும் இந்த Online(Zoom) வகுப்பில் பங்குபெறலாம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.12.1941 மறைவு 14.11.2019

### சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை
(கந்தன் கிட்டிணன்)

வாழ்வாங்கு வாழ்ந்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாய்,
எம்மை வாழ வைத்த தெய்வம்.
எம்மை விட்டு பிரிந்து
இன்றுடன் ஓராண்டு
மறைந்தனவே!

எம் அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இவ் ஓராண்டு நினைவு தினத்தில்
நினைவு கூருகின்றோம்.

கைதடி வடக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

*பாடசாலைகள்...*

சிரியர் கபில சீ.பெரேரா தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி நிறைவடைகின்றது. அன்றுடன் பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறையும் நிறைவடைகின்றது. விடுறையை நிறைவுறுத்தி பாடசாலைகளை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்க கல்வி அமைச்சு திட்டமிட்டிருந்தது. எனினும், தற்போது பரவிவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக உரிய திகதியில் பாடசாலைகளை மீளத் திறக்க முடியாத நிலை ஏற்படவுள்ளது என்று செயலர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சுகாதார அமைச்சிடம் பரிந்துரைகளையும் கல்வி அமைச்சு கேட்டுள்ளது. எனினும், சுகாதார பரிந்துரைகளின் அடிப்படையில்கூட பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தாமதமடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் எந்தவித பாதிப்பும் ஏற்படாதிருக்க மீண்டும் தொலைக் கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வசதிகள் குறைந்த கிராமிய பிரதேச மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பை வழங்கும் வகையில் விசேட வேலைத் திட்டத்தைத் தயாரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் சூழ்நிலை இல்லை என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு சுட்டிக்காட்டுகிறது. அத்துடன், பாடசாலைகள் முன்னர் இயங்குவதற்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் புதுப்பிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-இ)

## கொரோனா பரவுவதற்கு...

கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா ஆபத்தால் நாட்டை முற்றாக முடக்குமாறு கூக்குரலிடுவோர் இந்த நிலைமைக்கு யார் காரணம் என்ற உண்மை நிலையை மறைத்துக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அந்தத் தரப்பினர் எதற்கெடுத்தாலும் அரசு மீதே குற்றங்களை முன்வைத்து வருகின்றனர். உண்மையில் பொதுமக்கள் தங்களது கடமைகளை சரிவரச் செய்யாததன் காரணமாகவே தற்போதைய நெருக்கடியான நிலை உருவாகியுள்ளது. பொதுமக்கள் பொறுபற்ற விதத்தில் நடந்துகொள்ளும் போது அரசு மாத்திரம் தற்போதைய நிலைக்குப் பொறுப்பேற்க முடியாது. இது அரசு உருவாக்கிய வைரஸ் இல்லை. இது மக்களின் அசண்டையீனத்தால் பரவும் வைரஸாகும்.

சுகாதார வழிகாட்டல்களை மக்கள் உரிய முறையில் கடைப்பிடித்தால் கொரோனா வைரஸை ஒழிக்க முடியும். அரசால் மட்டும் இந்த வைரஸை ஒழிக்க முடியாது, என்றார். (ஒ,22)

## கொரோனா சாவு:...

களினால் பாதிக்கப்பட்ட அவர் கடந்த மாதம் 23ஆம் திகதி வெலிசறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆரம்பத்தில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படவில்லை. எனினும், நேற்று அவர் உயிரிழந்த பின் நடத்தப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 21ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் நேற்று 397 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சமூகத்தில் இருந்த 356 பேருக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்த 41பேருக்குமே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 60 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

## தனிமைப்படுத்தலில்...

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்தார். அவர் கொரோனாத் தொற்றால் இறந்தாரா என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'கொழும்பு கொச்சிக்கடை பகுதியிலிருந்து கடந்த 23ஆம் திகதி அவர் தலைமன்னாருக்கு வந்திருந்தார். தலைமன்னார் 'பியர்' பகுதியிலுள்ள அவருடைய வீட்டிலேயே அவரை சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறு பணித்திருந்தோம். இந்த நிலையில் நேற்றுக் காலை அவர் உயிரிழுந்தார் என்று அவருடைய குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அவரின் இறப்பு தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது. சடலம் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. அதன் பின்னரே அவர் கொரோனாவால் தான் இறந்தாரா என்பதை தெரிவிக்கமுடியும்' என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

வடக்கில் கொரோனா தொற்றாளர்களாக இதுவரை 10க்கும் மேற்பட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-56)

## 6 பேரை....

னும் கண்டறியப்படவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் உணவகம் நடத்திய நல்லூரைச் சேர்ந்தவர் மற்றும் அந்த உணவகத்தில் பணியாற்றிய புங்குடுதீவு மற்றும் வேலணையைச் சேர்ந்த மூவர் கடந்த 25ஆம் திகதி இரவு கொழும்பிலிருந்து NCG நிறுவனத்தின் WP NC 8760 என்ற பேருந்தில் யாழ்ப்பாணம் வந்தனர். இவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து இவர்களுடன் பயணித்த 43 பேரின் தொலைபேசி இலக்கங்கள் பேருந்து நிறுவனத்தால் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

அதற்கு அமைவாக 37 பேர் இனம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். எஞ்சிய 6 பேரின் தொலைபேசிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவர்களைக் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நேற்று இரவு வரையில் அவர்கள் கண்டறியப்படவில்லை. (ஒ,5)

## மந்திரிக்கப்பட்ட...

ஆறுகளில் கலந்துள்ளனர்.

மந்திரிக்கப்பட்ட குறித்த தண்ணீரை அமைச்சர்களான பவித்ரா வன்னியாராச்சி களு கங்கையிலும், பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகியோர் களனி கங்கையின் வெவ்வேறு பகுதிகளிலும் கலந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள கங்கைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை கலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## கிழக்கின்...

வரும் நாள்களில் இந்தியா மேற்கொள்ளவுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்தவார நடுப்பகுதியில் நடைபெற்றது.

அதாவது, அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு திரும்பியி ருந்த வேளை, இந்திய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டுமே பங்கெடுத்திருந்தார்.

இந்த சந்திப்புத் தொடர்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய உயர்ஸ்தானிகரின் அழைப்பின் பேரில் அவரை நேரில் சந்தித்திருந்தேன். இதன்போது பாரதப்பிரதமர் மோடியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு பிற்போடப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடினேன். பாரதப் பிரதமருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைந்து கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கோபால் பக்லே கூறினார்.

எனினும், சமகாலத்தில் காணப்படுகின்ற கொரோனா நிலைமையால் அதற்கான சந்தர்ப்பங்கள் நழுவிச்செல்லும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் கலாசார நிலையத் திறப்பு நிகழ்வுக்கு பாரதப்பிரதமர் வருகின்றபோது நாம் பிரத்தியேகமான சந்திப்பொன்றை மேற்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இதனைவிட, பாரதப்பிரதமரின் பயணத்துக்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுதல், வளங்கள் சூறையாடப்படுதல், குடிப்பரம்பலை திட்மிட்டு மாற்றுதல், வரலாற்று இடங்களைக் கையகப்படுத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. விசேடமாக புதிய ஆட்சியாளர்களின் காலத்தில் இந்தச்செயற்பாடுகள் வேகமெடுத்திருக்கின்றன. இந்த விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதும் பாராமுகமான நிலைமைகள் நீடிக்கின்றன.

ஆகவே இந்தியா இந்த விடயத்தில் கூடிய கரிசனை செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அத்துடன் இந்தியா வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார மீட்சிக்கான உரிய முதலீடுகளைச் செய்வதற்கு பின்ன டிக்காது விரைவுபடுத்த முன்வர வேண்டும் என்றும் நான் கோரினேன்.

இந்தியா அவ்வாறான முன் முயற்சியொன்றை எடுக்கின்றபோது தமிழ் மக்களின் இருப்பும் இந்தியாவின் நிலைப்பும் உறுதியாகும் என்பதையும் நான் எடுத்துக் கூறியிருந்தேன்.

அதன்போதே அடுத்துவரும் காலத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கோபால் பக்லே குறிப்பிட்டார். அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இந்தியா தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை என்றும் ஆக்கபூர்வமான வகிபாகத்தை தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் கோபால் பக்லே கூறினார் என்று சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-த.இ)

## வெளிவிவகார...

கொழும்பு, நவ. 2

அமரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம், சிறிய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் தனது வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றங்களை மேற்கொள்கின்றது என அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இலங்கைப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது மைக்பொம்பியோ இலங்கை ஜனாதிபதியுடன் சில நிமிடங்கள் மூடிய அறைக்குள் தனிப்பட்ட பேச்சுகளை மேற்கொள்வதற்கு விரும்பி யுள்ளார். இந்தச் சந்திப்பிலேயே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் தனிப்பட்ட செய்தியை மைக் பொம்பியோ கோத்தாபயவிடம் பகிர்ந்துகொண்டுள்ளார். அமெரிக்கா பெரிய நாடுகளில் இருந்து தனது கவனத்தை சிறிய நாடுகளை நோக்கி திருப்பியுள்ளது எனவும் மைக் பொம்பியோ கூறியுள்ளார்.

இலங்கையுடன் நெருக்கமாக இணைந்து செயலாற்றுவது குறித்து அமெரிக்கா ஆர்வமாகவுள்ளது. ஏதாவது விசேட தொழில் துறைக்கு அமெரிக்காவின் உதவி தேவைப்படுகின்றதா என மைக் பொம்பியோ கோத்தாபயவிடம் கேட்டுள்ளார். நாட்டின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று கோத்தாபய தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மாநிலமான கன்சாஸ் மூலம் அரசியலில் நுழைந்த தனக்கு நாட்டுக்கு பேண்தகு விவசாயத் தொழில்துறையின் முக்கியத்துவம் தெரியும் என்று மைக் பொம்பியோ தெரிவித்துள்ளார்.

பொதுவான விருப்பங்கள் காரணமாக நட்புறவை மேலும் வளர்த்துக்கொண்ட மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு குறித்து மேலும் பேச்சில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார். இறுதியில் மைக் பொம்பியோ தனது தனிப்பட்ட அலைபேசி இலக்கத்தையும் ஜனாதிபதி கோத்தாபயவிடம் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-த,22)

## யாழ்ப்பாண மக்களுக்கு ...

டுத்தப்பட்டுள்ளவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இதற்கு அமைவாக தென்பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு மேற்படி பொருள்கள் கிடைக்கவுள்ளன. ஆனால் வடக்கில் சுமார் ஆயிரத்து 200பேர் வரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் அவர்களுக்கு அந்த நிவாரணம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை அரச அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பாசையூர் மேற்கு, திருநகர், இராஜகிராமம் ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மற்றும் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளைப்பேணிய முதலாவது நபர்கள் என்று 459 குடும்பங்களைச் சேர்ந்த 956பேரை தனிமைப்படுத்தியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்திருந்தார்.

ஆனால் இவர்களுக்கு அரசின் நிவாரணம் வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேற்படி மூன்று கிராமங்களும் கொரோனாத் தடுப்புச் செயலணியினால் தனிமைப்படுத்தப்பட்டதாக எழுத்துமூல அறிவிப்பு கிடைக்கப்பெறவில்லை என்பதால் அரசின் நிவாரணத்தை கோர முடியாது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆனால் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸவரன் கூறுகையில், கொரோனா தடுப்புச் செயலணியால் மூன்று கிராமங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக எழுத்துமூலம் அறிவிக்கப்படவில்லை. ஆனால் செயலணியின் ஊடக அறிக்கையில் மூன்று கிராமங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொரோனா செயலணியால் மூன்று கிராமங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பலாலி படைத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மூன்று கிராமங்களினதும் வரைபடங்களை படைத் தரப்புக் கோரியது.

கொரோனா செயலணியால் மூன்று கிராமங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதாலேயே படைத்தரப்பு அந்த நடவடிக்கை எடுத்தது என்று குறிப்பிட்டார்.

ஆனால் மாவட்டச் செயலக அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்ததாது, கொரோனா செயலணியால் அறிவித்தல் வரவில்லை என்று கூறிக் கொண்டு மக்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்காமல் அசண்டையீனமாக இருக்கின்றனர். (ஒ,5)

*மாவட்டங்களுக்கு...*

ரூபா பெறுமதியான பொருள்கள், ஊரடங்கு நடைமுறையிலுள்ள பிரதேசங்களுக்கு முன்பிருந்த முறைமையின் கீழ் அத்தியாவசிய பொருள்கள் விநியோகம், மாவட்டங்களுக்கு இடையிலான பயணங்களுக்கு கடுமையான கட்டுப்பாடு என்று பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆள்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கு பதிலாக அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள தீர்மானம் நல்ல விளைவை தந்துள்ளது. இந்த நடைமுறையைத் தொடர்ந்தும் முறைப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் மற்றும் இராணுவம் ஆகிய தரப்புகளின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை 10ஆவது நாளில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் முடிவுகளுக்கு ஏற்ப தொற்றுக்கு உள்ளாகாதவர்களை 14 நாள்களுக்கு பின்னர் சாதாரண பொது வாழ்க்கைக்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதி சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். கொவிட் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கொவிட்- 19 தொடர்பில் அனுபவமில்லாத முன்னைய சந்தர்ப்பத்தின் போது மிகவும் சிறப்பாக மக்களை பாதுகாக்க அரசுக்கு முடியுமானது. அதன் போது மேற்கொள்ளப்பட்ட முறைமைகளை பயன்படுத்தி தற்போதைய நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

**எழுமாறான பரிசோதனைகள் மிகவும் அவசியமானவை**

தொடர்ச்சியாக எழுமாறான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அவற்றின் முடிவுகளை குறுகிய காலத்தில் வழங்குவதற்கு முடியுமான முயற்சிகளைச் செய்யுமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார். தனியார் மருத்துவமனைகளிலோ அல்லது அரசின் ஊடாகவோ எந்த வகையிலும் பி.சி.ஆர். பரிசோதனை செய்த போதும் குறித்த நபர் தொடர்பான முடிவுகள் வரும் வரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது கட்டாயமானது என்றும் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகள் சுகாதார அமைச்சின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டதன் பின்னர் தொடர்புடையவர்கள் மற்றும் அப்பிரதேசம் முடக்கப்படுவது நோய்த்தொற்று பரவுவதைத் தவிர்ப்பதற்கான உடனடி நடவடிக்கையாகும். அதற்கும் மேல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் நோய்த்தொற்று பரவுவதைத் தடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஊரடங்கு நடைமுறையிலுள்ள பிரதேசங்களில் அதனைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

பொருள்களை விநியோகித்தல் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த மாவட்டங்களுக்கு இடையிலான பயணங்களை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டவாறு அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதாக பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும், கிராம அலுவலர்களுக்கும் உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், மாதாந்தம் முதியோர் கொடுப்பனவுகள் முன்பு போன்று வீடுகளுக்கே சென்று வழங்கப்படுவதாகவும் பசில் தெரிவித்தார். (ஒ.இ)

# பிளேஒவ் சுற்றிலிருந்து பஞ்சாப் வெளியேற்றம்

## சென்னை நேற்று ஹற்றிக் வெற்றி

அபுதாபி, நவ. 2

ஐ.பி.எல் தொடரில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை மிக இலகுவாக வீழ்த்தியது சென்னை. சென்னையின் இந்த வெற்றியை அடுத்து தொடரில் இருந்து வெளியேறியது பஞ்சாப்.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணி தீபக் கூடாவின் அதிரடி ஆட்டத்தால் 6 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கூடா (62), கே.எல்.ராகுல் (29), மயாங் அகர்வால் (26) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிடி 3 விக்கெட்களையும் தாகூர், தாகிர், ஜடேஜா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

154 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை அணிக்கு பிளசிஸ், ருத்ராஜ் ஹெய்க்வாட் இணை பலமான ஆரம்பம் வழங்கியது. 18.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சென்னை அணி ஓர் இலக்கை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. ஹெய்க்வாட் (62), பிளசிஸ் (48), ராயுடு (30) ஓட்டங்களைப் பெற்றனர். (மரி4)





# ராஜஸ்தான் ரோயல்ஸ் நடையைக் கட்டியது!!

டுபாய், நவ. 2

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் படுதோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது ராஜஸ்தான் ரோயல்ஸ். முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா 7 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. அணித் தலைவர் மோர்கன் 35 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் திவெட்டியா 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 9 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து கொல்கத்தா அணி 60 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. (ம)

*இங்கிரியவில்...*

கொழும்பு, நவ. 2

இங்கிரிய பகுதியில் அமைந்துள்ள முன்னணி ஆடைத் தொழிற்சாலையில் 21 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அங்கு 6 ஆயிரம் பேர் வரையில் பணிபுரிகின்றனர். மினுவாங்கொட, பேலியகொட போன்று இதுவும் மற்றொரு கொத்தணியாக மாறும் அபாயம் உள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

தொழிற்சாலையின் ஊழியர் ஒருவர் கடந்த வாரம் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டது. இதன் பின்னர் ஏனைய 140 ஊழியர்களிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் முடிவிலேயே மேலும் 21பேர் கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் ரம்புக்கனவில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ம-ஒ.இ)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கரந்தன் நீர்வேலி மேற்கு ராசா கடை அருகாமையில் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பின் விலை 8 லச்சம் ரூபா (800 000/-) பிரித்து கொடுக்கப்படும் 1½ பரப்பாக. தரகர் தேவையில்லை
தொடர்பு:077 8949 549, 076 888 4625, 077 998 6806

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: குரு
077 805 1655, 076 6400 974

வேலை ஆட்கள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆட்கள் தேவை.
01. காசாளர் - (பெண், வயதெல்லை 20-35)
02. விற்பனையாளர் (பெண்/ஆண், வயதெல்லை 20-35)
03. களஞ்சிய காப்பாளர் (ஆண், வயதெல்லை 25-35
நேரில் சமுகம் தரவும்
NORTHWAY FAMILY MART
இல.184, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.No: 021 222 6002

மாணவர்களின் கல்வியில் அக்கறை கொள்வோம்
THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
REPEAT BATCH 2021 ONLINE CLASSES
ஆரம்பம் : 07.11.2020 சனிக்கிழமை
Chemistry: - Ka Subeesan (10.00Am – 11.30Am)
Physics: - R.Raakulan (05.00 pm – 06.30 pm)
இணைய விரும்பும் மாணவர்கள் 05.11.2020 இற்கு முன்னர் குறித்த பாடங்களுக்கான பதிவினை செய்ய கீழே தரப்பட்ட Number க்கு (பெயர், N.I.C Number) என்பவற்றை அனுப்பி வைக்கவும்.
PHYSICS - 076 5456 118
CHEMISTRY - 077 430 7829
மேலதிக தகவல்கள் பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.